பக்கங்கள்: எட்டு

Registred as a Newspaper

★ காஞ்சிபுரம்
★ பெனாரிஸ்
★ கெவி தஞ்சூர்
★ பாட்லி
★ பட்டுவேஷ்டிகள்

மற்றும் சகலவிதமான பிளவ்ஸ் பீஸ் வகைகளுக்கும்

ராசி சில்க்ஸ்
நியூ மார்க்கட்,
உட்புறம்
யாழ்ப்பாணம்.

# உதயன்

விலை ரூ2/50

மங்கள வைபவங்களுக் கேற்ப, உடுபுடைவைகள்

ராசி சில்க்ஸ்
70, நியூ மார்க்கட்
உட்புறம்
யாழ்ப்பாணம்.

சுடர்: 4 சுக்லை ஸூ சித்திரை மீ 29 உ வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1409 ஷவ்வால் பிறை 06 (12 - 05 - 1989) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்:-133

முச்சந்தி முரளி



பள்ளிக்கூடப் பிள்ளையளுக்கு ஆரம்பமே 'ஷொக்' காக இருக்குது...!

### இருதய நோய்க்குச் சிகிச்சை பெற

# விஜேவீரா வெளிநாடு செல்ல

# அரசு முழுப் பாதுகாப்பு ஏற்பாடு!

## ஒய்வூதியம் தாமதமாகும்

யாழ்ப்பாணம், மே 12

யாழ். செயலக ஒய்வூதியக் கிளை இயங்கியபோதும், ஒய்வூதியம் வழங்குவதற்கான வவுச்சர்கள் கொழும்பில் இருந்து வந்து சேராததால் ஒய்வூதியம் வழங்குவது தாமதம் ஏற்படும் என்று செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

அடுத்த வாரம் கொழும்பில் இருந்து வவுச்சர்கள் வந்ததும் ஒய்வூதியம் உடன் வழங்கப்படும் என்று அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (ஒ-3)

## யாழ். இரத்தவங்கிக் கருவி முழுமையாக இயங்கும்

### விரைவில் நிபுணர் வருகிறார்

யாழ்ப்பாணம், மே 12

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரி இரத்த வங்கி நவீன குளிர்சாதன கருவி முழு அளவில் இயங்கக்கூடிய வாய்ப்பு அடுத்த மாதம் ஏற்படும்.

பிரஸ்தாப கருவியைத் தக்க முறையில் இயக்கக்கூடிய தொழில் நுட்ப நிபுணர் ஒருவர் இம்மாத இறுதியில் இங்கு வருகிறார்.

யாழ். போதனா வைத்திய சாலை இரத்த வங்கியில் 300 லீற்றர் இரத்தம் சேமித்து வைக்கத்தக்க குளிர்சாதனக் கருவி ஒன்று உள்ளது.

இரத்தவங்கியில் இக்கருவி பலகாலமாக இருந்தபோதிலும், அதைப் பராமரித்து இயக்க ஆய்வுகூட நுட்பவியலாளர் இல்லாததால் அதை முழுதாகப் பாவிக்கமுடியாது இருந்தது.

இக்கருவிமூலம்இரத்தத்தின் கூறுகளைப் பிரிக்க முடியும் என்றும் அதன்மூலம் சிலநோய்களுக்குக் குறிப்பிட்ட கூறு

(8 ஆம் பக்கம் பார்க்க)

## ஜே. வி. பி. பேச்சுக்கள் நடத்தவும் முன் வரக் கூடும்

— கொழும்பிலிருந்து சிறப்புச் செய்தியாளர் —

கொழும்பு, மே 12

மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே. வி. பியின்) தலைவர் திரு. ரோகண விஜேவீராவுக்கு இருதய நோய். அதற்குச் சிகிச்சை பெறுவதற்காக அவர் வெளிநாடு செல்வதற்கு, முழுப் பாதுகாப்பும் வழங்கி அனுப்பிவைக்குமாறு ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸ உத்தரவிட்டிருக்கிறார்.

இதேவேளை, அரசாங்கத்துடன் பேச்சு நடத்துவதற்கு ஜே. வி. பி. முன்வந்துள்ளதாகவும், அதற்கு நிபந்தனையாகத் தமது தலைவர் ரோகண விஜேவீரா வைத்திய சிகிச்சை பெற வெளிநாடு செல்ல அனுமதி தரவேண்டும் என்று அரசாங்கத்திடம் கேட்டுள்ளதாகவும் கொழும்பில் உள்ள பி. பி. சி. செய்தியாளர் தெரிவித்திருக்கிறார்.

ஜே. வி. பி. தலைவர் திரு. ரோஹண விஜேவீராவுக்கு இருதய நோய் கண்டுள்ளதாகவும், அதற்கு சிகிச்சை பெற அவர் வெளிநாடு செல்ல விரும்புகிறார்என்றும் கொழும்பில் உள்ள பி. பி. சி. செய்தியாளர், வெளிநாட்டு அமைச்சுக்குத் தெரியப்படுத்தினார்.

இது விடயம் ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசாவின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது. அதைத் தொடர்ந்து, திரு. விஜேவீரா வைத்திய சிகிச்சைக்கு விரும்பிய வெளிநாட்டிற்குச் செல்வதற்கு, வேண்டிய வசதிகளையும், முழுப் பாதுகாப்பையும் வழங்குமாறு ஜனாதிபதி திரு. ரத்தினவுக்கு உத்தரவிட்டார்.

### லண்டன் செல்ல ஆசனப் பதிவு

கொழும்பிலிருந்து செல்லும் விமானமொன்றில் ஜே.வி.பி. தலைவரும் குழுவினரும் லண்டன் செல்ல ஆசன ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக பிந்திக் கிடைத்த செய்திகள் தெரிவித்தன. (அ-9)

பிரேமதாச வெளிநாட்டு அமைச்சர் திரு. ரஞ்சன் விஜேரத்தினவுக்கு உத்தரவிட்டார்.

இத்தகவல்களை வெளிநாட்டு அமைச்சு நேற்று மாலை கொழும்பில் பத்திரிகைகளுக்கு வெளியிட்டது— என்று கொழும்பிலிருந்து உதயனின் சிறப்புச் செய்தியாளர் அறிவித்தார்.

### பி. பி. சியின் தகவல்

இதேவேளை பி. பி. சி. வானொலி நேற்று மாலையும் இரவும் பின்வருமாறு தெரிவித்தது;-

இலங்கை அரசுடன் பேச்சுக்

(8-ம் பக்கம் பார்க்க)

## மதிய உணவு சாப்பிட்ட மாணவர் மயங்கினர்!

### மதவாச்சியில் சம்பவம்

கொழும்பு மே 12

பாடசாலைகளில் மதிய உணவு சாப்பிட்ட 97 மாணவர்கள் மயக்கமுற்று, ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்தச் சம்பவம் வடமத்திய மாகாணத்தில் நேற்று இடம்பெற்றது.

மதவாச்சியில் உள்ள ஒரு பாடசாலையிலும், அதனை அண்டிய ஊரிலுள்ள மற்றொரு பாடசாலையிலும் மதிய உணவு உட்கொண்ட மாணவர்கள் மயக்க

(8 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு - வவுனியா ரயில் இடைவழியில் நின்றது!

யாழ்ப்பாணம், மே 12

நேற்று கொழும்பு-வவுனியா ரயில் சேவை நடைபெறவில்லை.

குருநாகல் பகுதியில் ரயில் தண்டவாளம் கழற்றப்பட்டதை அடுத்தே இந்த ரயில் சேவை தடைப்பட்டதாக அறிய வருகிறது.

வவுனியா ரயில் நிலையத்தில் ரயில் தாமதமாக வரும் என முன்னர் அறிவிக்கப்பட்டது. ஆயினும் பின்னர் ரயில் குருநாகலுடன் நிறுத்தப்பட்டுவிட்டதாக அறிவிக்கப்பட்டது.

இதனை அடுத்து ரயிலுக்காக சென்ற பலர் பஸ்களிலேயே கொழும்புப் பயணத்தை மேற்கொண்டனர்.

யாழ் - வவுனியா இணைப்புச் சேவை பஸ்கள் பயணிகள் இல்லாத நிலையில் நேற்று மாலை யாழ்நகருக்கு திரும்பிவந்தன. (ஒ-9)

## விபத்தில் மரணம்

யாழ். 4ஆம் குறுக்குத்தெருவில் நேற்று முன்தினம் மோட்டார் சைக்கிள் — மினிபஸ் விபத்து ஒன்றில் ஒருவர் படுகாயமடைந்தார். பின்னர் இவர் யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு நேற்று மரணமானார்.

மரணமானவர் ஊரெழுவைச் சேர்ந்த தேவி சுந்தரலிங்கம் (வயது 56) என்பவராவார். (ஒ-9)

### கிளிநொச்சி, பரந்தன் பகுதி

## அடகு நகைகள் இன்று பலாலி கொண்டு வரப்படும்

யாழ்ப்பாணம், மே 12

கிளிநொச்சி - பரந்தன் ஆகிய பகுதிகளுக்கான அடகு நகைகள் இன்று பலாலிக்குக் கொண்டு வரப்படவுள்ளன.

முன்னர் யாழ். மாவட்டத்திற்கான நகைகளே எடுத்து வரப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் இதுவரை கிளிநொச்சி - பரந்தன் பகுதி நகைகள் எதுவும் வழங்கப்படாததை அடுத்து பிரஸ்தாப பிரதேசங்களைச் சேர்ந்த மக்களின் நகைகள் அவசர அவசரமாக இன்று எடுத்து வரப்படுகின்றன.

இவை பின்னர் இங்கிருந்து ஹெலிக்கொப்டர் மூலம் கிளிநொச்சிக்கு எடுத்துச் செல்லப்படும்.

கிளிநொச்சி தபால் நிலையத்தில் உள்ள மக்கள் வங்கியில் வைத்து இவை அடுத்த சில தினங்களில் வழங்கப்படும். (ஒ-9)

## அரசு - விடுதலைப் புலிகள் பேச்சுக் குறித்து அமிர்

கொழும்பு, மே 12

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் இடையில் நடைபெற்று வரும் பேச்சுக்கள் மூலம் நல்ல தீர்வு கிடைக்குமானால் அது மகிழ்ச்சிக்குரியதாகும்.

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரமுகரும் எம். பி. யுமான திரு. அ. அமிர்தலிங்கம் தெரிவித்தார்.

இந்தப் பேச்சுவார்த்தை மூலம் ஒரு நல்ல தீர்வு கிடைத்து தமிழ்ப் பகுதிகளில் அமைதியும், தமிழ் மக்களின் உரிமைகளும் நிலைநாட்டப்படவேண்டும் என்பதே எமது முழு விருப்பமும் ஆகும்—

ஆனால் கிடைக்கும் தீர்வு தமிழர் அமைப்புகள் மோதிக் கொள்வதைத் தவிர்க்கும் விதத்தில் அமைவது அவசியம். அப்போதே தமிழ்ப் பிரதேசங்களில் நிரந்தர அமைதி பிறந்து மக்கள் நிம்மதியாக வாழமுடியும்—

அரசு – விடுதலைப் புலிகள் பேச்சுக் குறித்து அமைச்சர் திரு. தொண்டமான் எம்முடன் கலந்துரையாடினார்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

### யாழ். நகரிலிருந்து கல்முனை நோக்கிச் சென்ற

# அரச பஸ் உட்பட ஐந்து வாகனங்களில்

# புளியங்குளம் பகுதியில் கொள்ளை!

வவுனியா, மே 12

யாழ்ப்பாணத்திலிருந்து நேற்றுக் (வியாழன்) காலை கல்முனை நோக்கிச் சென்ற இ. போ. ச. பஸ் உட்பட நான்கு பஸ்களில் சென்ற பயணிகளையும், ஒரு லொறியையும் மறித்த ஆயுதந் தாங்கிய கோஷ்டி ஒன்று, பல லட்சம் ரூபா பெறுமதியான நகைகள், ரொக்கப்பணம் என்பவற்றைக் கொள்ளையடித்துக் கொண்டு தலைமறைவாகியுள்ளது.

### பஸ் நடத்துநரும் சுடப்பட்டார்

பகல் பத்து மணியளவில் புளியங்குளம்பகுதியில் (புதூர் சந்திக்குச் சமீபமாக) இடம்பெற்ற இச் சம்பவத்தில் பஸ் கண்டக்டரான சுந்தரமூர்த்தி (வயது 35) என்பவர் சூட்டுக் காயத்துடன் ஆபத்தான நிலையில் வவுனியா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் பற்றித் தெரிய வந்துள்ளதாவது:-

புளியங்குளத்தை அடைவதற்கு சுமார் ஒரு மைல் தூரமிருக்கும்போது, ஓடிக்கொண்டிருந்த பஸ்ஸின் சாரதியை நோக்கி குறிவைத்தபடி வீதியில் ஒருவன் நின்றுகொண்டிருக்க வேறு மூவரும் வீதியோரத்தில் நின்று பஸ்ஸை மறித்துள்ளார்கள்.

இக்கோஷ்டியின் தலைவனைப் போலக் காணப்பட்டவன் ''கூலிங் கிளாஸ்'' அணிந்து தலையில் சிவப்பு நிறத் துண்டு

(8-ம் பக்கம் பார்க்க)

## சடலம் ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், மே 12

நேற்றுக்காலை சுட்டுக்கொல்லப்பட்ட ஒருவரின் சடலம் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

இறந்தவரின் உடலில் வெட்டுக் காயங்களும் காணப்பட்டன.

இவர் யாழ். ஓட்டுமடம் பகுதியில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்ட பின் வெட்டப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

கொலையுண்டவர் கே. சபாரட்ணம் (வயது 18) என்பவராவார். (ஒ-9)

## முல்லை கச்சேரிக்கு வந்த புதிய ஜீப் கடத்தப்பட்டது

மாங்குளம், மே 12

முல்லைத்தீவு கச்சேரிக்குக் கொண்டுவரப்பட்ட புதியஜீப் ஒன்று கடந்த செவ்வாய்க்கிழமை மாலை இனம்தெரியாதவர்களால் கடத்தப்பட்டது.

கொழும்பிலிருந்து முல்லைத்தீவுக் கச்சேரிக்கு ஜீப் வந்து கொண்டிருந்தபோதே கனகராயன்குளம் பகுதியில் வைத்துக் கடத்தப்பட்டது.

அந்த ஜீப்பில் வந்த முல்லைத்தீவு மேலதிக அரசாங்க அதிபர் திரு. சண்முகலிங்கம், ஜீப் சாரதி ஆகியோர் விடுவிக்கப்பட்டனர். (ஒ-94)

## யாழ். செயலகம்

யாழ்ப்பாணம், மே 12

யாழ். செயலகத்தில் நான்கு பிரிவுகள் மட்டுமே இவ்வாரத்தில் செயற்பட்டன.

உணவுத் திணைக்களம், கணக்கியல் பிரிவு, ஒய்வூதியக் கிளை, சமூகசேவைப் பிரிவு ஆகியவை அந்த 4 பிரிவுகளும் ஆகும். (ஒ-3)

# அமைச்சர்கள் - புலிகள் பேச்சு

கொழும்பு, மே 12

அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினருக்கும் இடையிலான பேச்சுக்கள் ஆரம்ப கட்டத்திலிருந்து அமைச்சர்கள்மட்டத்திற்கு நேற்றுக்காலைமாறியது.

அரசாங்கத் தரப்பில் அமைச்சர்கள் ரஞ்சன் விஜேரத்ன, ரணில் விக்கிரமசிங்கா, சிறிசேன கூரே, ஏ. சி. எஸ். ஹமீத் ஆகியோர்பேச்சுவார்த்தையில் கலந்துகொண்டனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் தரப்பில் டாக்டர் அன்ரன் பாலசிங்கம் தலைமையில் திரு. திலிப் யோகி, திரு. மூர்த்தி, திரு. லோரன்ஸ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்திய இராணுவத்தினர் ஓர் அமைதி காக்கும் படையினர் போல நடந்துகொள்ளவில்லை என்று விடுதலைப் புலிகள் தரப்பில் எடுத்துக் கூறப்பட்டதாம்.

1987 ஜூலைக்குப் பின்னர் தமிழ்ப் பகுதிகளில் ஏற்பட்ட பாதிப்புகளின் முழு விவரங்களும் பேச்சுவார்த்தையின் போது சமர்ப்பிக்கப்பட்டன.

விடுதலைப் புலிகள் பிரதிநிதிகள் நேற்றுக் காலையிலும் ஜனாதிபதியை அவரது 'சுசரித்த' வாசஸ்தலத்தில் சந்தித்து சுமார் அரை மணி நேரம் பேசினர்.

பின்னர் இரவு 7 மணியள

(8 ஆம் பக்கம் பார்க்க)

## பிரட்மன் - கமநாயக்கா 2 தினங்களுக்கு முன் சந்திப்பு

கொழும்பு, மே 12

ஜே. வி. பி. இயக்கத்தின் முக்கிய பிரமுகர்களில் ஒருவரான திரு. உபதிஸ்ஸ கமநாயக்க இரண்டு தினங்களுக்கு முன் எயர் லங்கா நிறுவனத்தின் தலைவர் திரு. பிரட்மன் வீரக்கோனைச் சந்தித்துப் பேசியிருக்கிறார்.

திரு. ரோகண விஜேவீரவை வைத்திய சிகிச்சைக்கு வெளிநாட்டுக்கு கூட்டிச் செல்வது குறித்தும். பேச்சு நடத்த விருப்பம் தெரிவித்தும் திரு. கமநாயக்கா கலந்துரையாடி இருக்கலாம் என கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது.

திரு. பிரட்மன் வீரக்கோன், திரு. பிரேமதாச பிரதமராக இருந்தபோது அவரது செயலாளராக பணிபுரிந்தவர் ஆவார். [அ-1-9]

### சுபநேரம்

சுபநேரம்:
05.54 முதல் 07.24 வரை
ராகுகாலம்:
10.24 முதல் 11.54 வரை

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்


### விற்பனைக்கு

ஆனைக்கோட்டையில் தியாக சீலத்துக்குப் பின் 4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்புக்குபுது வாழ்வு நிலையம், ஆனைக்கோட்டை. [503]

நல்ல நிலையில் வேலை செய்து கொண்டிருக்கும் 25 SRI தொடர் இலக்க ரோட்ராக்டர் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: K. S. R. K. கிறைண்டிங்மில், G.P.S.லேன் கல்வியங்காடு. [501]

சீமெந்து, கொங்கிறீற்கற்கள் 4 அங்குலக் கனம் தற்சமயம் சனிசமான அளவுவிற்பனைக்கு உண்டு. சென்ற மாதம் விசாரணை செய்த எல்லோருக்கும் கொடுக்க இயலாமல் போனமைக்கு வருந்துகின்றோம். தேவைப்படுவோர் உடன் தொடர்பு கொள்ளவும். ஆனந்பண்ணை, கட்டுவன்வீதி, மயிலிட்டி வடக்கு. [391]

P. B. D இன்டஸ்றீசாரின் தயாரிப்புக்களான றெபிங்புக் வெளிக்களப் புத்தகம், மொனிற்றேஸ்புக் நோட்புக், வெஜர்புக், சயன்ஸ் றெக்கோட்புக் அனைத்தும் நல்ல முறையில் தயாரிக்கப்பட்டு விற்பனையாகின்றன. கல்லூரிகள், ஆசிரியர்கள், வியாபாரிகள் அனைவருக்கும் மொத்த விலையில் கிடைக்கும். தொடர்பு: பூபாலசிங்கம் புத்தகசாலை [புத்தக களஞ்சியம்] யாழ்ப்பாணம். [C/2510]

National T. V. 20'', 14', Belling Oven National 2 in 1 5030, பாவித்த கட்டில், மேசை, சாப்பாட்டு மேசை, Cot, செற்றி செற், குசன் செற்றி இன்னும் பல உடன் விற்பனைக்கு உண்டு. ஸ்ரீராம், 3 ஆம் கட்டை, பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு. (10871)

### கோழிக்குஞ்சு விநியோகம் UPLANDS FARM

(Dekalb) பிறவுண் ஒருமாத பேட்டுக்குஞ்சு (18 - 5 - 89) வியாழக்கிழமை விநியோகிக்கப்படும். தடுப்பூசி போடப்பட்டது. முன்கூட்டியே பதிவு செய்க. இல. 9, கந்தையா லேன், சுன்னாகம். [புகையிரத நிலையத்துக்கு அண்மையில்] [10891]

(Dekalb) பிறவுண் பேடு சேவல் குஞ்சுகள், கறுப்பு சேவல் குஞ்சுகள் (Cobb) புறொயிலர் குஞ்சுகள் (16-5-89) செவ்வாய்க் கிழமை விநியோகிக்கப்படும். பிறவுண் சேவல் குஞ்சுகள் 50க்குமேல் எடுப்பவர்களுக்கு விலை ரூ3/50 முன்கூட்டியே பதிவு செய்க இல:9 கந்தையா லேன், சுன்னாகம் (புகையிரத நிலயத்திற்கு அண்மையில்) (392)

### கோழிக்குஞ்சு விநியோகம்

தூய இன Hyline வெள்ளை· கறுப்பு, Golden Comet பிறவுண் பேட்டுக்குஞ்சுகள், Christhombo, Indian River, புறொயிலர் குஞ்சுகள், பிலிமத் கறுப்பு, மாதம் இருமுறை விநியோகிக்கப்படும். பதிவு செய்யவும். யாழ்ப்பாணம் கால்நடை வளர்ப்போர் சங்கம், சுன்னாகம் கிளை, [பயிர்ச் செய்கை உத்தியோகத்தர் காரியாலயம்] K.K.S. றோட், சுன்னாகம். [10886]

புறொயிலர் குஞ்சு, பேட்டுக் குஞ்சு, கறுப்பு, வெள்ளை சேவல் குஞ்சு ஒவ்வொரு வாரமும் விநியோகிக்கப்படும். S. செல்வரெட்ணம், ஆலய வீதி, K. K. S. [393]

பிறவுண் சேவற்குஞ்சுகள் 100க்கு மேல் விலை 3/50, 250க்கு மேல் விலை 3/00, முழுப் பணமும் முன்கூட்டியே செலுத்தி பதிவு செய்க. சற்குணராஜா & பிறதர்ஸ் பிரம்படிலேன், கொக்குவில். [350]

### தேவை

கிறைண்டிங் மில்லில் வேலை செய்வதற்கு அனுபவம் உள்ளவர்கள் தேவை. பழகி விருப்பவர்களும் விண்ணப்பிக்கலாம். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். K S. R. K. கிறைண்டிங் மில். G. P S. லேன், கல்வியங்காடு. (502)

### மணமகன்தேவை

சைவ உயர்வேளாள குலத்தைச் சேர்ந்த 29 வயது உதயத்தில் செவ்வாய் உள்ள B. Sc. ஆசிரியைக்கு கணக்காளர், பொறியியலாளர் மற்றும் உயர்பதவி வகிக்கும் மணமகன் தேவை. வீடு, பணம், நகை என்பன சீதனமாகக் கொடுக்கப்படும். அரசாங்க தொழில் நுட்பவியலாளரான 34 வயது சகோதரனுடன் மாற்று விவாகமும் கவனத்தில் எடுக்கப்படும் 512 C/o உதயன். (396)

### வாடகைக்கு

இந்தியா, சிங்கப்பூரிலிருந்து தருவிக்கப்பட்ட மணமகளின் தலைச்சோடனை மற்றும் நகைகளை வாடகைக்குப் பெற்றுக் கொள்ளநாடுங்கள். அனித்தா ஸ்கூல், பூநாரி மாத்தடி, கொக்குவில், and மினிரேட்ஸ் சென்ரர், No 3, J. M. C. Building, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம். (399)

### சேவை

முற்றிலும் இலவசமான திருமண சேவைக்கு தொடர்பு கொள்க: சகாயர் திருமண சேவை, புதுவாழ்வு நிலயம், ஆனைக்கோட்டை. (504)

### குளிர்சாதனப் பெட்டிகள்

ரூபா 750 மாத்திரம் செலுத்தி உங்கள் Fridgeக்கு Gas நிரப்பிக் கொள்ளுங்கள். Motor Compressor gas இரண்டிற்கும் ஒரு வருட உத்தரவாதம் கொடுக்கப்படும். Omega (ஈழநாட்டிற்கு எதிரில்) யாழ்ப்பாணம். (380)

### TYPEWRiTER

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும் விற்கவும் சிறந்த முறையில் திருத்திக் கொள்ளவும் தமிழ் ஆங்கில ரைப்பிங் செய்து கொள்ளவும். நாடுங்கள்: Fudo Enterprises 39/17, மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். [சி/2433]

### ADVANCED ENGLISH

புதிய பிரிவு ஆரம்பம் 20- 5- 89 சனி, ஞாயிறு நாட்களில் நேரம் பகல் 10.30 – 12. 00 மணி. S. B. Iyar, 12, வைமன் வீதி, நல்லூர். [10837]

### 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில்

மேற்படி பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் தமிழ் மொழியில் அதிக புள்ளிகள் பெறவும் வசதியான பாடசாலையில் அனுமதி கோரவும் வழிசெய்யும் கட்டுரைத் தேன் துளி 60. ஆக்கம்: க. சொக்கலிங்கம் M A. உயர் கல்விப் பதிப்பக வெளியீடு. விலை ரூபா 17/50. புத்தகசாலைகளில் கிடைக்கும் (10883)

### A/L 91 இரசாயனம்

108 Brown Road ஆசிரியர் சக்தீஸ் பிரிவுII சனி, ஞாயிறு 11.00 a m. இரண்டாவது வகுப்பு சனி 11. 00 a m பிரிவுI செவ்வாய், வியாழன் 6.30 a.m. (394)

### SPOKEN ENGLISH

புதிய பிரிவு ஆரம்பம் 22 – 5 – 89 திங்கள், புதன் நாட்களில் நேரம் காலை 6 மணி — 7½ மணி வரை S. B. Iyar 12, வைமன் வீதி, நல்லூர். [10838]


## இலவச மூக்குக் கண்ணாடி

சாவகச்சேரி, மே 12

சாவகச்சேரி லயன்ஸ்கழகம் ஏழைகளுக்கு இலவச மூக்குக் கண்ணாடிகளை வழங்கியது.

டாக்டர் எஸ். எஸ். அருளானந்தம் கண்களைப் பரிசோதனை செய்து பார்வை குறைந்த 150 பேருக்கு கண்ணாடிகளை வழங்கினார். (ச-31)

# மிக நேர்மையாகக் கடமை புரிந்து திருப்தியான தெரிவைச் செய்யுங்கள்

## முல்லை அரசு அதிபர் வேண்டுகோள்

முல்லைத்தீவு, மே 12

உங்களை மக்களே தெரிவு செய்துள்ளனர். எனவே உண்மையில் ரூபா 2500/- பெறத் தகுதியானவர்கள் யார் என்பதைத் தெரிவுசெய்வதில் நீங்கள் மிகக் கூர்மையுடன் பணியாற்ற வேண்டும். 1985 ஆம் ஆண்டு உணவு முத்திரை "ஆ" படிவத்தில் தனது குடும்ப வருமானம் மாதம் ஒன்றுக்கு ரூபா 300/- எனப் பிரகடனப்படுத்தியவர்களின் பட்டியலைக் கொண்டு அலசி ஆராய்ந்தே தெரிவுகள் நடைபெற வேண்டும்.

கடமையைமிக நேர்மையாகச் செய்து தெரிவுகளை மக்களின் திருப்திக்கேற்ப நடைமுறைப் படுத்துமாறு உங்களை வேண்டுகிறேன்"

முல்லைத்தீவு மேலதிக அரசாங்க அதிபர் [நிர்வாகம்] திரு. கே. சண்முகலிங்கம் ஜனசக்தித் திட்ட முகவர்களுக்கும், கிராமசேவை உத்தியோகத்தர்களுக்கும், உப குழு உறுப்பினர்களுக்கும் நடத்திய கருத்தரங்கில் மேற்கண்டவாறு கூறினார். (க-92)

## மாணவர் முதல்வர் கூட்டம்

சாவகச்சேரி, மே 12

சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் மாணவர் முதல்வர் ஒன்றுகூடல் நிகழ்ச்சி தலைவர். எஸ். கோகுலரமணன் தலைமையில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் சாவகச்சேரி நீதிபதி திரு. எம். திருநாவுக்கரசு பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்தார்.

கல்லூரி அதிபர் திரு. கே. எஸ். குகதாசன், துணை அதிபர்கள் திருவாளர்கள் ஏ. சந்திரசேகரம், கே. அருணாசலம் ஆகியோர் சிறப்புரை நிகழ்த்தினார்கள். (க – 31)

## பெண் காயம்

சாவகச்சேரி, மே 12

சாவகச்சேரிடச்சு வீதியைச் சேர்ந்த திருமதி பூவிலிங்கம் தங்கரத்தினம்என்னும்பெண் ஷெல்தாக்குதலுக்கு ஆளாகி பலத்த காயங்களுடன் சிகிச்சைக்காக யாழ் போதனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். (ச-31)

## கொடுப்பனவு கிடைக்கவில்லை

ஒட்டுசுட்டான், மே 12

முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம் பெயர்ந்த குடும்பங்கள் பெறக்கூடிய மீள் குடியமர்த்தல் நிவாரணநிதி உற்பத்தி முயற்சிக்கான நன்கொடை ஆகியவற்றைப் பெறத்தவறியவர்களுக்கு இந்தக் கொடுப்பனவுகள் இன்னும் வழங்கப்படவில்லை.

இவற்றுக்கான படிவங்கள் பூர்த்தி செய்யப்பட்டு நீண்ட நாட்களாகி விட்டதாக பெறத்தவறியவர்கள் கவலையுடன் தெரிவிக்கின்றனர். (க – 113)

## திருத்தல பாதயாத்திரை

சாவகச்சேரி, மே 12

தென்மராட்சி திருத்தல பாதயாத்திரை 14 ஆவது தினமாகிய வெள்ளிக்கிழமை பகல் சாவகச்சேரி ஸ்ரீ வீரபத்திரர் ஆலய தரிசனத்துடன் நிறைவேறியது.

ஆத்மஜோதி ஆசிரியர் திரு. நா. முத்தையா தலைமையில் 230 திருத்தலங்களைத் தரிசித்து வந்த இக்குழுவினரை மாணவர்கள் சைவப் பெரியார்கள் ஆக 200க்கும் அதிகமானோர் கூடிவரவேற்றனர். (க – 13)

## பண்ணைக் கடலில்

# மீன் திருட முயன்றவர்கள் சைக்கிளை விட்டுத் தப்பினர்

குருநகர், மே 12

வலையில் அகப்பட்டிருந்த மீன்களைப் பட்டப்பகலில் திருட முற்பட்டிருந்தவர்கள் துப்பாக்கி வேட்டுச் சத்தத்தைக் கேட்டதும் தப்பிச் சென்றனராம்.

மண்டைதீவு சென்றியில் நின்ற அமைதிப்படையினர் இவர்களைக் கண்டு துப்பாக்கி வேட்டுத் தீர்த்ததும் மீன் திருடர்கள் நீரில் மூழ்கித் தப்பிச் சென்றனர் என்று தெரியவருகிறது.

இவர்கள் வந்த இரு சைக்கிள்களும் இப்பொழுது அமைதிப்படையினர் வசம் உள்ளன. (ச-51)

# இளைஞரை நல்வழிப்படுத்துவதே லியோ கழகங்களின் குறிக்கோள்

## செய்திக் கதிர் வெளியீட்டு விழாவில் உரை

இளைஞர்களை நல்வழிப்படுத்தி நல்ல தலைவர்களாக உருவாக்குவதே 'லியோ' கழகங்களின் குறிக்கோளாகும். லியோ கழகங்கள் கல்லூரி மாணவர்களின் நற்செயல்களுக்குச் சந்தர்ப்பம் அளித்து, தலைமைத்துவப் பண்பை வளர்த்து சமூகத்தில் அனுபவங்களைப் பெற்றுக் கொள்வதற்கு வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்கின்றது.

இவ்வாறு யாழ். மத்திய கல்லூரி லியோ கழகத்தினரின் 'லியோ செய்திக் கதிர்' வெளியீட்டு விழாவில் வெளியீட்டுரை நிகழ்த்திய லயன். க. விக்னராஜா குறிப்பிட்டார்.

இவ்விழாவிற்குத் தலைமை வகித்து உரையாற்றிய லியோ ப. இரகுநாதன் தமது உரையில் 1959இல் அமெரிக்காவின் பென்சில்வேனியா நகரில் முதலாவது லியோ கழகம் ஆரம்பிக்கப்பட்டது. எமது லியோ கழகம் 1982இல் ஆரம்பிக்கப்பட்டது. 'லியோ இசம்' இளைஞர்கள் மத்தியில் பொறுப்புணர்வையும், பிறருக்கு உதவும் மனப்பான்மையையும் வளர்ப்பதன் மூலம், வாழும் சமூகத்திற்குச் சேவை செய்யத் தூண்டுகின்றது என்று குறிப்பிட்டார்.

யாழ். பல்கலைக்கழக தமிழ்த் துறை விரிவுரையாளர் திருமதி சந்திரலேகா மௌனகுரு அவர்கள் கடந்த ஏழு வருடங்கள் யாழ். மக்களின் வாழ்வில் இக்கட்டான காலகட்டமாக இருந்தபோதும் ஏழு ஆண்டுகளுக்கு முன்பு ஆரம்பிக்கப்பட்ட இந்த லியோ கழகத்தின் பணி குறிப்பிடத்தக்கதாக உள்ளதைச் செய்திக் கதிர் மூலம் அறியக்கூடியதாக உள்ளது எனக் குறிப்பிட்டார்.

யாழ். பல்கலைக்கழக ஆங்கிலப் போதனாசிரியர் திரு. செ. கமலாகரன் தமது ஆய்வுரையில் இந்நூலிலுள்ள விஞ்ஞானக் கட்டுரைகள் மிகச் சிறப்பாக எளியமுறையில் எவராலும் விளங்கிக்கொள்ளக் கூடிய முறையில் அமைந்துள்ளன எனத் தெரிவித்தார்.

கடந்தவருட சிறந்த லியோவினருக்கான பரிசில்களை பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டயாழ். செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் டாக்டர் ரி. தெய்வேந்திரன் வழங்கினார் கல்லூரி அதிபர் திரு. ப. பாலசுந்தரம் தொடக்கவுரை நிகழ்த்தினார்.

லியோ க. சயந்தநாதன் நன்றியுரை கூறினார். விழாவில் இன்னிசை வாத்தியக் கச்சேரியும், சி. ஜெயசங்கரின் நெறியாள்கையில் 'உருவாகிய குழந்தை' ம. சண்முசலிங்கம் எழுதிய 'ஆச்சி சுட்ட வடை' எனும் நாடகமும் இடம்பெற்றன. [க-69]

# மன்னார் மாதரின் தேவைகளுக்கு குரல் கொடுக்க புதிய சங்கம்

## ம. து. ம. ச, தலைவர் பேச்சு

யாழ்ப்பாணம், மே 12

'பல்லின மக்கள், கூடி வாழும் மன்னார் மாவட்டத்தில், மாதர்களின் சேவைகளையும் தேவைகளையும், ஒருங்கிணைத்து குரல்கொடுக்கவென ஓர் சங்கம் இல்லாத குறையை இன்றைய வைபவம் போக்கியுள்ளது. இதில் செயற்படும் செயற்குழு உறுப்பினர்கள், மிகவும் ஒத்துழைப்புடன் உயர்வு, தாழ்வு பாராது சகல எதிர்ப்புக்களையும், வன்சொல்லையும் தாங்கக் கூடியவர்களாக இருந்து விடாமுயற்சியுடன் சேவையாற்ற வேண்டும்.

ம. து. ம. ச. தலைவரும் குரு முதல்வருமான வண. பிதா அ. சேவியர் குரூஸ் அடிகளார் மன்னாரில் புதிய மாதர் அபிவிருத்தி ஒன்றியம் ஒன்றை ஸ்தாபித்துவைக்கும் வைபவத்தில் மேற்கண்டவாறு கூறினார்.

'இம்மாவட்டத்தில் சிறுர்களின் மரணவீதம் அதிகரித்து இருப்பதாகவும், இவற்றை மாதர்கள் கவனிக்க வேண்டும்' என்றும் விழாவில் உரையாற்றிய சிறுவர்பாதுகாப்பு நிதிய பிரதிநிதி திரு. ஸ்டான்லி ஜோசப் கூறினார்.

வெளிநாடுகளில் மாதர்களின் பங்கு என்ன என்பதைப் பற்றி ஐக்கியநாடுகள் அகதிகள் ஸ்தானிகராலய வைத்தியர் (யு. என். எச். சி. ஆர்.), செல்வி மாரியா பிரான்சிகாவும், பிரான்ஸ் நாட்டு வைத்தியக் குழுவைச் சேர்ந்த (எம். எஸ். எப்.) செல்வி மொனிக்காவும் உரையாற்றினர். (க)

# காணமற்போன ஆசிரியரின் மனைவிக்கு சம்பளம் கிடைக்கும்

## கல்வி அமைச்சு அதிகாரிகள் ஒப்புதல்

கடந்த நான்கு வருடங்களுக்கு முன் காணமற் போன ஆசிரியரின் மனைவிக்கு ஆசிரியரின் மாதச் சம்பளத்தை வழங்க கல்வி அமைச்சு அதிகாரிகள் ஒப்புதல் அளித்துள்ளனர்.

வவுனியா கிறிஸ்தோகுளம் அ. த. க. பாடசாலையின் ஆசிரியரான திரு. சற்குணசேயோன் 2-12-1984இல் இருந்து காணமற் போய்விட்டார். அவரது சம்பளத்தை மனைவிக்கு வழங்கும்படி இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வவுனியா கல்விப் பணிப்பாளர், கல்வித் திணைக்கள அதிகாரிகள் ஆகியோரை வற்புறுத்தி வந்தது.

இதைத்தொடர்ந்து ஆசிரியரின் மனைவிக்கு ஆசிரியரின் நிலை தெரியும்வரை அல்லது 55 வயதடையும்வரை அவரின் மாதச் சம்பளத்தை வழங்கும்படி வவுனியா கல்விப்பணிப்பாளருக்கு கடிதம் அனுப்புவதாக அமைச்சு அதிகாரிகள் உறுதியளித்துள்ளதாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் திரு. த. மகாதேவன் தெரிவித்தார். (ச-30)

## மொட்டை அடிப்பு

காரைநகர், மே 12

காரைநகர் வடக்கு கடற்கரையில் கொள்ளை அடிக்க முயன்ற இருவரை மீனவர்கள் வளைத்துப் பிடித்துகாரைநகர் அம்பாள் விரிவாக்க கடற் தொழில் அபிவிருத்திச் சங்கத்திடம் ஒப்படைத்தனர்

விசாரணையின் பின் கொள்ளை அடிக்க வந்ததை ஒப்புக் கொண்டதால் இவர்கள் மொட்டை அடிக்கப்பட்டு மக்கள் முன்னிலையில் நிறுத்தப்பட்டனர். [ச–73]


## எமது புதிய வெளியீடுகள்

1. பிரபு ✱ கௌதமி ✱ ரேகா 'பிள்ளைக்காக' [மினி சினிமா உரிமையாளர்கள் தொடர்பு கொள்ளவும்]
2. முரளி ✱ பல்லவி ✱ S.S. சந்திரன் 'தங்கமணி ரங்கமணி' (ORIGINAL)

குணம் வீடியோ சென்ரர்
42, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
[சி/2557]

## PERSONAL CLASSES

BMC முன்லேன் - யாழ்ப்பாணம்

**A/L 89 & 90 Pure & Applied**

ஆசிரியர்
திரு. விஜயகுமார் B.Sc.(Ce .)

நிகழ்தகவும் புள்ளிவிபரவியலும்
Sat. & Sun. 1-30 — 3-30

ஆரம்பம்: 13-05-1989.
Sat. 1-30 p. m.
[C/2555] விபரங்கள் நேரில்,


## 1 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

திரு. P. S. குமாரசாமி
(இளைப்பாறிய அதிபர் யாழ் இந்துக்கல்லூரி)

அன்புத்தெய்வமே! பாசத்தின் பிறப்பிடமே! மாறாத அன்பில் எம்மை மகிழ வைத்த அன்புத் தெய்வமே! திடீரென மீளாத்துயில் கொண்டது ஏனோ? எம் அன்புத் தெய்வமே! அப்பா! உம் எழில் முகத்தை எப்போ காண்போம்?

மனைவி, பிள்ளைகள்.
சுன்னாகம், [C/2560]

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



திரு சி. மகாதேவன்பிள்ளை
மறைவு: 12- 04- 1989

குடும்பத்தினர்-
வியாபாரி மூலை,
பருத்தித்துறை. (10893)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் பி. எஸ். குமாரசாமியின் முதலாவது ஆண்டு நினைவஞ்சலி

## பி. எஸ். வாழ்வின் வளர்ச்சி - நிறைவு

## இந்துவுடன் இரண்டறக் கலந்தவை

குட்டி போட்டபூனை போன்று யாழ் இந்துவையேசுற்றிச் சுற்றித் திரிந்த ஓர் ஒப்பற்ற உள்ளம் உடல் ரீதியாக மறைந்து இன்று ஒருவருடம். அவர் மறைந்தார் என்பதை எம்மால் ஏற்றுக்கொள்ளவும் முடியவில்லை, தாங்கவும் முடியவில்லை. ஆனால் அது உண்மையாகிவிட்டது.

01 - 01 - 1937 இல் இந்துவில் மழலை மாருப் பாலகனுகச் சேர்ந்த குமாரசுவாமி 11 - 02 - 1984 இல் கல்லூரியின் அதிபர் பதவியை அலங்கரித்த பி. எஸ். ஆக விலகிய காலம், அவரின் வாழ்க்கையின் வளர்ச்சியும் நிறைவும் இந்துவின் வளர்ச்சியோடு பின்னிப்பிணைந்தவை.

அதிபராக இருந்தபோது அவர் சோர்ந்தபோது இந்துவின் சமூகம் சோர்ந்தது, அவர் மிளிர்ந்தபோது அதுவும் சேர்ந்து மிளிர்ந்தது.

யார் இந்த பி. எஸ்? அவருக்கு ஏன் இந்த கிரேவேர்ஷிப்- அவர் என்னத்தை வெட்டிப்புடுங்கினுர் என்று சிலர் இப்போது முணுமுணுப்பது எமது காதில் விழும்போது தான். இரத்த அழுத்தம் ஏற்படுகின்றது. கழுதைக்குத் தெரியுமா கற்பூர வாசனை என்றுவிட்டுவிட வேண்டியது தான் இதற்கு மேலால் நாம் என்ன செய்யமுடியும்?

**- சு. டிவகலாலா -**
**(செயலாளர் யாழ். இந்து பழையமாணவர் சங்கம்)**


ஒன்று ஐயா

பி. எஸ். இன் வாழ்க்கையில் அந்த மனுஷன் கல்லூரியைப் பற்றி அல்லாமல் வேறு எதை ஐயா யோசித்தார்? உயர் பதவியை நாடியதா? மனைவி மக்களின் குடும்பப் பட்சனுய்த் திரிந்ததா? காலையில் 7 மணிக்கு வந்தால் இரவுபடபஸ்தான் ஐயா - இதை எமது கல்லூரியில்வேறு யார் செய்தார்கள்? ஆசிரியர், அரசாங்க உத்தியோகத்தர் அல்லன் அவன் சேவையாளன், காலை 8.30 மணிக்கு வந்து 2 மணிக்கு கல்லூரி மணி அடித்ததும் ஒட்டம்பிடித்தால் அந்தஅதிபரோ ஆசிரியனே அக்கல்லூரிச் சமூகத்துடன் ஒட்ட முடியாது- இது எமக்குபி.எஸ் தந்த பாடம்.

பி. எஸ் எந்த மாணவனையும்வழிப்படுத்தத் தவறவில்லை. மாணவனின் நலனேதன் நலன்என வாழ்ந்தவர்- மாணவனை மாணவனுக, மனிதனுக மதித்து அணுகி அவனை நெறிப்படுத்தியதினுல் தான் 'இன்று அவர் எம் சமூகத்தில் வாழ்கின்ருர்.

அவரின் ஆளுமை அலாதி
'எடே சோமு இறங்கு மைதானத்துக்குள்'
'சிவராமர் எப்படி போடிங் போகுது'
'சந்தியா பெடியன் என்னவாம்'
அட்மிஷன் கேட்டு இங்கு வராதே
எப்படிப் போகுது வாழ்க்கை
என்ன செய்கின்ருய்
அங்கால போ மூதேவி
என்று பி. எஸ். சொல்லும் போது
அன்புடன், ஆளுமையுடன் சேர்ந்த
கட்டளை எம்மவர் மனதில் பதிந்து விடும்
'சேர் அட்மிஸன் வேண்டும்
மந்திரியின் கடிதம் கொண்டுவந்துள்ளேன்
ஒரு பார்வை
ஒரு சிரிப்பு
தந்து விட்டுப் போ
நான் மந்திரிக்கு எழுதுகின்றேன்
டே இது கிண்டுவடா
இந்தக் கதிரை கிறுங்காதடா
என்று பதில் வரும்-
இதைக் கேட்டுக் கேட்டு, நெஞ்சும்
தலையும் நிமிருவோம் நாம்
இப்ப காலம் மாறிப்போச்சு,
மந்திரியின் கடிதமா?
சாமியின் கடிதமென நாம் நடுங்க
காலம் எதை நிமிர்த்துவது
இறுதியாக, ஐயா பி. எஸ்.
உங்கட வைரவர் கோயில்
கட்டியாச்சு,
கும்பாபிஷேகம் செய்தாச்சு
திருப்தியா?
யார் செய்தது என்று
கேட்கிறீர்களா?
நாங்கள்தான்
அதிபர்,
உப அதிபர்கள்,
மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சபை,
நலன் விரும்பிகள்,
அத்துடன், உங்கள் பழைய மாணவர்.
சங்கமும்தான்,
சேர் ஒரு விடயம்
மண்டலாபிஷேகத்தில்
உங்கள் பூசை
இன்றைக்குத்தான்
திருப்திதானே?
ஓ! நீங்கள் இங்கு இல்லையோ?
ஐயா!

இத்தலம் உள்ளவரை,
இந்து நிலைக்கும் வரை,
இந்துவின் சமூகம் வாழும் வரை
உங்கள் நாமம் நிலைக்கும்!



யாழ். இந்து அதிபர் அமரர் பி. எஸ். குமாரசாமி

## மக்கள் அதிபர் - அமரர் பி. எஸ்

சிறந்த மாணவனுகவும், மாணவத் தலைவனுகவும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் துலங்கிய அமரர் பி. எஸ். குமாரசாமி அவர்கள் அதே கல்லூரியில் வரலாற்று ஆசிரியராகப்பணியாற்றிய பின் அதிபருமானுர். இலங்கையின் வரலாற்றில் மிகுந்த ஆர்வத்தைக் காட்டிய அதிபர் தான் கற்ற கல்லூரியின் ஒரு நூற்ருண்டு வரலாற்றை எழுதும் சவாலையும் ஏற்றுக் கொண்டார். ஒரு நூற்ருண்டை எட்டிக் கொண்டிருக்கும் கல்லூரியின் வரலாற்றை எழுதும் நோக்குடன் வரலாற்றைக் கற்ற மாணவர்களை அணிசேர்த்துக் கொண்டிருந்தார். அதே நேரத்தில் சைவசமயத்தில் அக்கறையுள்ள அதிபர் ஒருநூண்ருண்டு காலமாக கல்லூரிக்கென ஒரு கோயில் இல்லாமையைக் கண்டு மனம் வருந்தினுர். தானே கோயிலைக் கட்டி முடிக்கும் பணியையும் ஏற்றுபழைய மாணவர்களின் முயற்சியுடன் அக் கைங்கரியத்தை நிறைவேற்ற முனைந்தார். முற்றுப் பெறும் நேரத்தில் காலனுல் கவரப் பெற்ருர். நூற்ருண்டு வரலாற்றை எழுதித்தரவிருந்தவரே அவ் வரலாற்றில் முக்கிய இடம் பெற்று விட்டார். இன்று அவர்எம்மைவிட்டுப் பிரிந்து ஓராண்டு நிறைவு பெறுகின்றது.

அன்னருக்கு அஞ்சலி செலுத்தும் நாம் அஞ்சலியோடு மட்டும் நின்று விடாமல் கல்லூரியை எவ்வாறுஅமைக்கவேண்டுமென அவர் எண்ணினுரோ அந்த நோக்கை நிறைவேற்றுவதே எமது கடமையாகும். சென்ற 10-4-89 இல் கோயில் குடமுழுக்கை நிறைவு செய்த அன்னரின் அபிமான நண்பர்களும் மாணவர்களும் சேர்ந்து ஊக்கத்துடன் செயற்பட்டதை இங்கு குறிப்பிடாமல் விடமுடியாது. அவர்கள் பி. எஸ். ஸின் இறுதிக்கிரியையில் இட்ட சபதங்களுள் ஒன்றை நிறைவேற்றியது பாராட்டுதற்குரியது.

அமரர் பி. எஸ். இலட்சிய ஆசிரியர் மட்டுமல்ல சிறந்த அதிபர், விளையாட்டு வீரன், நிர்மாணத்துறை நிபுணர், கல்வியில் கலங்கரை விளக்கு, பல்கலைச் செல்வன், உற்ற நேரத்தில் உதவும் உத்தமன், ஆசிரியருக்கு ஆசிரியனுய், மாணவனுக்கு மாணவனுய், நண்பனுக்கு நண்பனுய் நின்று செயற்படும் செயல் வீரன், காட்சிக்கினியன், பழகுதற்கினிய பண்பாளன், சொன்னசொல் தவருதவன், கூறியவற்றை மறுக்காதவன், இனிய சொல்லால் சாதிக்கும் சாதனையாளன், இல்லை என்று சொல்லும் பொழுது கூட இனிய சொல்லால் புன்முறுவலோடு பேசும் இயற்கையாற்றலுடையவன் இன்னேரன்ன குணங்களை உடையவன் இன்றில்லை.

மதிப்புக்குரிய அவர் குணத்தால், பண்பால் பழகும்விதத்தால்பலவழிகளிலும் உயர்ந்து வாழ்ந்து காட்டிய உத்தமன்.

அவர்யாழ் இந்துவின் மாணவர்கள், ஆசிரியர்கள்,பழைய மாணவர்கள், அபிமானிகள் அயலவர்கள் ஆகியோரை 'யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் குடும்பம்'' எனக் கருதி கல்லூரியோடு இணைந்து விடவேண்டுமென வலியுறுத்துவார். குடும்பமாகக் கருதி கடைசி வரை கட்டிக்காத்த கனவான்.

மாணவ சமுதாயத்துக்கு இலைமறைகாய் போல் பல உதவிகள் புரிந்ததை அவரின் மறைவுக்குப் பின் அறியக் கூடியதாக இருந்தது. பரீட்சைக்குப் பணம், புத்தகம், வாங்கநிதி, உடுபுடவை ஆகியவற்றை யாருமறியாமலே செய்தது அன்னரின் மறைவின் பின் தெரியவந்தது. இதே போன்று நண்பர்கள், உற்ருர், உறவினர் ஆகியோரும் பயன் பெற்றனர். இத்

(7 ஆம் பக்கம் பார்க்க)

**- சிறிநி -**
**யா. இ. க.**

## பண்புடைய பெரியார்

எமது மதிப்பிற்கும் அன்பிற்கும் பாத்திரமான அதிபர் பி. எஸ். குமாரசாமி அவர்கள் இவ்வுலகை நீத்து ஓராண்டு சென்று விட்டது. இக்காலவோட்டத்தில் எமது உணர்ச்சிகள் சாந்தமடைந்து விட்டன. இவ் வேளையில் நாம் அமரரைப் பற்றிச் சுயமாகச் சிந்திக்கக் கூடிய தாயுள்ளம்.

அமரரைநினைவு கூரும் இவ் வேளையில் என் மனத்திரையில் பளிச்சிடுவது அவரது மனிதாயப் பண்பு நிறைந்த உள்ளமாகும். அவர் எமது கல்லூரியில் அதிபராகக் கடமையாற்றிய காலை அவருடன் மிக மிக அந்நியோன்யமாகப் பழகவேண்டியசந்தர்ப்பங்கள் எனக்கு ஏற்பட்டன.

அவ் வேளைகளில் கல்லூரி சம்பந்தமான விடயங்களை மனந் திறந்து கூறுவார்.

எந்தவொருவிடயமானுலும் அவர் மனிதாபிமானக் கண்கொண்டே அவற்றை அணுகினுர்.

அவருடைய ஆளுமை மிகவும் சக்தி வாய்ந்தது. எந்த வகையானபிரச்சினையானுலும் அதற்கு முகங் கொடுத்து தீர்வுகண்டுசமாதானப்படுத்தி விடுவார். மனப் பாரத்துடன் தன்னை நாடி உதவி தேடி வருபவர்களை உட்கார வைத்து ஆறுதலாக அளவளாவி அவர்களின் மனச் சுமையை இறங்க வைத்த பின்பே அனுப்பி வைப்பார்.

''பண்பெனப்படுவது பாடறிந்தொழுகல்'' என்னும் முதுமொழிக்கிணங்க வாழ்ந்து காட்டியுள்ளார். அவர் ஆற்றிய அளப்பரிய சேவைகளும், செயற்பாடுகளும் இவ்வுலகில் புகழுடம்புடன் என்றும் வாழவழி வகுத்துள்ளன எனநினைவுகூருகிறேன்.

**அ. பஞ்சலிங்கம்**
**அதிபர்**
**கொக்குவில்**
**இந்துக் கல்லூரி**

## பி. எஸ். என்று அழைக்கப்பட்டு வந்த ஆசான்

இந்துக்களின் சமய கலாசாரப் பண்பாட்டைப் பேணிப் பாதுகாத்து வளர்க்க, தமிழ் சைவப்பெரியோர்களின் பெருமுயற்சியால் 19 ஆம் நூற்ருண்டின் இறுதிப்பகுதியில்ஸ்தாபிக்கப்பட்டு, இன்று நூற்ருண்டுப் பூர்த்தியை இன்னும் சில மாதங்களில் எதிர்பார்த்து நிற்கும் எங்கள் கல்விக்கூடம் யாழ் இந்துக் கல்லூரி நூற்ருண்டு விழாவின் முன்னேடியாக ஸ்தாபகர்களின் பெருநோக்கு வெற்றியைப் பெருமையுடன் அடையாளம் காட்டி நிற்கும் சிவஞான வைரப சுவாமி திருக்குடமுழுக்குப் பெருவிழா கல்லூரியின் சரித்திரத்தில் ஒரு மைல் கல். கல்லூரியின் நூற்ருண்டுச் சரித்திரத்தில் இரண்டாம் அரை நூற்ருண்டு முழுமையாகத் தனது முத்திரையைப் பதித்த தனி ஒரு மனிதர் மறைந்த பழைய மாணவன், ஆசிரியர், அதிபர், பழைய மாணவ சங்கத் தலைவர் பி. எஸ். குமாரசாமி அவர்கள்.

அன்னையையும் அப்பனையும் வலம் வந்து மாங்கனியைப் பெற்றவன் வேதவிநாயகன் என்ருல், தனது அன்னையாம் யாழ். இந்துக் கல்லூரியை வையமாக வைத்து வாழ்ந்தவர் சிவஞான வைரவர் திருக்கோயிலைக் கனவு கண்ட பி. எஸ். அவர்கள்.

பதினெட்டாம் பிராயம் முடிவதற்கு முன்பு யாழ். இந்துக்கல்லூரியிலிருந்து 1946 ஆம் ஆண்டு பல்கலைக்கழகப் பிரவேசம் செய்து கல்லூரிக்குப் பெருமை தேடிய மாணவன். பல்கலைக்கழகத்தில் சிறந்த மாணவனுகவும் யாவரையும் கவரக்கூடிய திறமையுள்ள சிறந்த விளையாட்டு வீரனுகவும் திகழ்ந்தார். வாழ்க்கை முழுவதுமே யாழ். இந்துக் கல்லூரியின் விளையாட்டு மைதானத்தில், மாணவர்களின் கல்வி, செம்மை இவற்றில் செலுத்திய அதே அக்கறையை அதே ஊக்கத்தைச் சமமாகக் கடைப்பிடித்துக் கல்லூரியின் கல்வி வளர்ச்சியிலும் விளையாட்டு வெற்றியிலும் எவரும் அதிசயிக்கத்தக்க பெருமை கண்ட ஆசிரியர், அதிபர் திரு. பி. எஸ். அவர்கள்.

இந்தியா, இங்கிலாந்து தேசத்தின் ஈற்றன் காரோ விளையாட்டு மைதானங்களில் வெல்லப்பட்டது என்கின்ருர் ஒரு சரித்திர ஆசிரியர். எனவே சரித்திர ஆசிரியரான பி. எஸ். விளையாட்டின் மகிமையை உணர்ந்தது வியப்பில்லை. 1950 ஆம் வருடம் தனது பழைய கல்லூரியில் உதவி ஆசிரியராக, புகழ்மிக்க அதிபர் திரு. ஏ. குமாரசுவாமியினுல் நியமிக்கப்பட்டார்.

ஈன்ற பொழுது பெரிது
உவக்கும் தன் மகனை
சான்ருேன் எனக் கேட்ட
தாய்''

என்ற பெருமகிழ்ச்சி பெற்றவர் இருவர். அன்னை யாழ். இந்துக் கல்லூரி ஒருவர். மற்றவர் திரு. ஏ. குமாரசுவாமி அவர்கள். உயர் அரசாங்க பதவிகள் இளம் பிராய இலங்கைப் பல்கலைக்கழகப் பட்டதாரிகளைத் தேடித் திரிந்த காலம். சுதந்திரம் பெற்று இரண்டு ஆண்டுகள் மட்டுமே சென்ற காலம். தேசிய இளைஞர்கள் அந்நியர்களின் பதவிகளை நிரப்பிய காலம். ஆனுல் உயர் அரசாங்க பதவிகள் அவற்றின் வருங்கால உயர்வுகள், பெருமைகள் இளைஞன் பி. எஸ். ஸை அன்னை இந்துக் கல்லூரிக்கு ஒப்பிடத்தக்கவைகளாகக் காணவைக்கவில்லை. அதனுற்ருன் போலும் அதிபர் என். சபாரத்தினம், திரு. பி. எஸ். அவர்களின் முதற் காதல் என்று இந்துக் கல்லூரியைக் குறிப்பிட்டிருக்கின்ருர்.

''A Grievous Loss to His First Love''

பதினைந்து நீண்ட வருடங்கள் யாழ். இந்துக் கல்லூரியில் பம்பரம் போல் சுழன்று கடமையாற்றியவர். பி எஸ். திறமைசாலி. அவரின் திறமை முழுமையாகப் பயன்படுத்தப் பட்டதென்ருல் பயன் பெற்ற அன்னை இந்துக்கல்லூரி, தன் குழந்தையை எண்ணிப் பூரிப்படைந்தாள் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி கணித, விஞ்ஞான துறைகளில் உயர்ந்து நிற்பது யாழ் இந்துக் கல்லூரி 1950 ஆம் ஆண்டு யாழ் இந்துக் கல்லூரி கலைத் துறையில் பிரதானமாக சரித்திரப் பாடத்தில் முன்னைய இந் துறைகளுக்கும் ஈடாகி விட்ட

[7ஆம் பக்கம் பார்க்க]

**சி. இ. விக்னேஸ்வரன்**
**கௌரவ தனுதிகாரி**
**(யாழ். இந்து பழைய மாணவர் சங்கம் கொழும்பு - 1)**


# ஆதரவாளர்கள்

★ ஷப்ரு யூனிகோ பினன்ஸ் கம்பனி லிமிட்.
207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

★ நிர்மலா ட்ரான்ஸ்போர்ட்,
101, சிவன்கோவில் வடக்குவீதி, வண்ணுர்பண்ணை.

★ செட்டியார் அச்சகம்,
430, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

★ சிவா ஸ்டோர்ஸ், (யாழ் இந்துவுக்கு முன்னுல்)
425, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

★ வை. ஜி. மெடிக்கல்ஸ்,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

★ யாழ். இந்து, பழைய மாணவர் சங்கம்.

★ சிற்றி மெடிக்கல்ஸ்,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லூர் உ. அ.அ. பிரிவின் விளையாட்டுப் 'போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், மே 12 நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவின்கீழ் கழகங்களுக்கிடையிலான வருடாந்த விளையாட்டுப் போட்டிகள் அண்மையில் யாழ் முத்துத் தம்பி மகாவித்தியாலயத்தில் நடைபெற்றன.

பல்வேறு பிரச்சினைகளின் காரணமாகப் பின்போடப் பட்ட இப்போட்டி நல்லூர் விளையாட்டு அதிகாரியின் பெருமுயற்சியால் சிறப்பாக நடைபெற்றது. எனினும் இப்போட்டியில் பங்குபற்றிய பெண் போட்டியாளர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாகவே இருந்தது.

மெய்வல்லுனர் போட்டிகளில் கலாமன்றம் விளையாட்டுக்கழகம் 1 ஆம் இடத்தையும் பொற்பதி விளையாட்டுக் கழகம் 2 ஆம் இடத்தையும் நொதேர்ண் விளையாட்டுக் கழகம் 3 ஆம் இடத்தையும் பெற்றன.

ஆண்களுக்கான செட்டப் முறையிலான கரபந்தாட்ட போட்டியிலும் 22 வயதுக்குட் பட்டோருக்கான எல்லே போட்டியிலும் நொதேர்ண் விளையாட்டுக் கழகம் வெற்றியீட்டியது.

உதைபந்தாட்டப் போட்டியில் பொற்பதி விளையாட்டுக் கழகமும் பெண்களுக்கான சரபந்தாட்டம் வலைப்பந்தாட்டம் ஆகிய இரு போட்டிகளிலும் அரியாலை விளையாட்டுக் கழகமும் வெற்றியீட்டின.

(க-6)

### கொத்தணி விளை. போட்டி

கோப்பாய், மே 12 கோப்பாய் கொத்தணி பாடசாலைகளின் வருடாந்த இல்லவிளையாட்டுப் போட்டி இன்று 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கோபபாய் கிறீஸ்தவக் கல்லூரி மைதானத்தில் நடைபெறுகின்றது.

பிரதம விருந்தினராக மருதனமடம் கோட்டக்கல்வி அதிகாரி திரு. இ. க. குலசேகரம் கலந்து கொள்கிறார்.

(க - 72)

## போதிய வசதி அற்ற நிலையில் ரயில்வே கடவை ஊழியர்கள்

யாழ்ப்பாணம், மே 12 யாழ்ப்பாணத்தில் பத்து ரயில்வே கடவைகளில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டுள்ள அறுபது பாதுகாவலர்களுக்கும் உரிய நேரத்தில் சம்பளம் கிடைப்பதில்லை. போதிய வசதிகள் இல்லை.

இப்படியாக புகார் கூறுகின்றார்கள் ரயில்வே கடவைப் பாதுகாவலர்கள்.

ஜனாதிபதியின் பணிப்பின் கீழ் கதவு இல்லாத புகையிரத கடவைகளுக்கு பாதுகாவலர்கள் நியமிக்கப்பட்டிருந்தார்.

இதன்படி யாழ்ப்பாணத்திலும் யாழ் ரயில் நிலையத்தில் இருந்து 10 கடவைகளுக்கு தலா ஆறுபேர் வீதம் நியமிக்கப்பட்டிருந்தனர்.

இவர்களுக்கு சம்பளம் குறைவாக உள்ளதாகவும் — உரிய நேரத்தில் சம்பளம் கிடைப்பதில்லை என்றும் —

தமக்கு அமைத்துத் தரப்பட்ட வதிவிடங்களில் மழை வந்தால் நனைந்து கொண்டு இருக்க வேண்டும் என்றும்—

இரவில் வேலை செய்யும் போது விளக்குகூட இல்லாமல் இருப்பதாகவும் — அவர்கள் புகார் கூறுகின்றனர்.

(இ-3)

### சிவப்பிரகாச ம.வி, விளை. போட்டி

சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி பாடசாலை மைதானத்தில் இன்று 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் திரு. கா. சந்திரபாலன் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராகத் திரு. எ. தங்கராசா (பிரதம கல்வி அதிகாரி யாழ் கல்வித்திணைக்களம்) பங்கு பற்றுகிறார்.

சிறப்பு விருந்தினராகத் திரு திருமதி, த. ஜீவரத்தினம் பங்கு பற்றுகிறார்கள் பாடசாலைக்கொடியை திரு. மு. கார்த்திகேசு (ஓய்வு பெற்ற யாழ் தொழில்நுட்பக் கல்லூரி போதனாசிரியர்) ஏற்றுவார். மங்கள விளக்கை பாடசாலை ஸ்தாபகர் குடும்பத்தைச் சேர்ந்த திரு. சிவசம்பு சண்முகராசாவும் திருமதி அழகேஸ்வரி சண்முகராசாவும் ஏற்றுவர். (க)

### வலைப்பந்துப் போட்டிகள்

குருநகர் றெக்கிளமேஷன் சனசமூக நிலைய 25 ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி நடைபெறுகின்ற பெண்களுக்கான வலைப்பந்தாட்டத்தின் முதல் ஆட்டத்தில் யுத்கார்மல் 'ஏ' அணியை எதிர்த்து விளையாடிய சென். ஜேக்ஸ் அணி வெற்றிபெற்றது.

இரண்டாவது ஆட்டத்தில் வைக்கிங்ஸ் ''பி'' அணியுடன் மோதிய சென். அன்ரனிஸ் அணி திறமையாக விளையாடி வென்றது.

இப் போட்டிகள் கடந்த 3ஆம் திகதி நடைபெற்றன.

---

### ஓராண்டு கண்ணீர் அஞ்சலி



அன்னை மடியில்

09 - 06 - 1967

தமிழன்னை மடியில்

12 - 05 - 1988

**இராசையா உதயபாலன் (காந்தி)**

உரும்பராயில் உதித்திட்ட
உதய சூரியன் காந்தியே
புரட்சிப் பொய்கையிலே
பூத்திட்ட புதுமலரே
தமிழ்காக்க தமிழ்மண்காக்க
தன்னுயிர் ஈந்த மறவனே
உயிர் உள்ளவரை உன்நாமம்
நாம் மறவோம்
என்றும் எம் கண்ணீர்த்துளிகள்
உன் பாதங்களுக்கே.

காந்தியின் ஆத்ம சாந்திக்காக உரும்பராய் புனித மிக்கேல் ஆலயத்தில் 12-5-89 வெள்ளி மாலை 5 30 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

உன்நினைவைத் தாங்கிநிற்கும்:
அன்பு அப்பா, அம்மா,
சகோதர சகோதரிகள்.

உரும்பராய் கிழக்கு,
உரும்பராய்.

(10878)

---

### அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



படைப்பு:
28- 12 1921

அழிப்பு:
13- 04- 1989

**அமரர் சின்னையா பாலசிங்கம் J.P.**

(ஓய்வுபெற்ற அதிபர்-பேண்காம் பாடசாலை, அச்சுவேலி)
(Co - Ordinator Save the Children U. K. Colombo)

சென்ற 13- 4- 89இல் சிவபதமடைந்த சின்னையா பாலசிங்கம் அவர்களின் வீட்டுக்கிரியை 13- 5- 89 சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகைதந்து மதிய போசனத்திலும் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

எமக்கு ஆறுதல்கூறி உதவிகள் செய்து இறுதிக் கிரியைகளில் பங்குபற்றி எமது துயரத்தில் பங்கு கொண்ட அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

''திருவிசிமா''
அல்வாய் வடக்கு,
அல்வாய்.

மனைவி, மக்கள்.

(464)

---

### 31 ஆம் நாள் நினைவு அஞ்சலி

தோற்றம்:
03-12-1910

மறைவு:
13-04-1989



அமரர்
**திருமதி மேரி இராசரத்தினம் பீற்றர் செல்லத்துரை**

அன்பெனும் கோவில் தனை ஆக்குவித்தாய் அம்மா!
அறிவு எனும் ஞான ஒளி ஏற்றுவித்தாய் அம்மா!
அஞ்ஞான இருள் அகற்றி அரவணைத்தாய் அம்மா!
ஆறுதல் தர உலகில் இனி ஆருளர் அம்மா!

15-04-1989 மரணசடங்கில் கலந்தும் அனுதாபச் செய்திகள் அனுப்பியும் எமது துக்கத்தில் பங்கு கொண்ட அனைவருக்கும் நன்றியைத் தெரிவிப்பதுடன் 13 05-89 சனிக்கிழமை மதிய போசனத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

'ருஜ்மகால்'
பத்தாவத்தை,
இளவாலை.

சணவர், மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள்.

(10890)

---

### 31 ஆம் நாள் நினைவஞ்சலி

படைப்பு:
01 - 06 - 1942



அழிப்பு:
12 - 04 - 1989

**திரு. க. செல்லத்துரை (B A.Dip.in Ed.M.A.)**

(அதிபர், யாழ் / மீசாலை விக்கினேஸ்வர மகா வித்தியாலயம்)

நாடு தழைத்திட நல்லவர் வாழ்ந்திட—
நடுவூர்ப் பழுத்த நன்மரமாய்
கேடு களைந்த செல்லத் துரையவன்
கோபுரமெனவே உயர்ந்து விட்டான்
ஆடும் மயிலும் - பாடும் குயிலும்
அலையும் மலையும் அகல்வானும்
பாடும் செல்லத் துரையின் பெருமை
அவனியில் சாற்றும் அவன் வாழ்க!
தங்கள் ஆத்மா சாந்தியடையப்பிரார்த்திக்கின்றோம்.


— மனைவி, பிள்ளைகள்
உறவினர்கள்.

சரசாலை வடக்கு,
சாவகச்சேரி.

[10844]

---

### 31 ஆம் நாள் நினைவஞ்சலி



**ஜெயா (ச. சிவராசா) - வரணி**

ஜெனனம்:
07-07-1968

மரணம்:
12-04-1989

செந்தமிழ் வீரனே தியாகச் சுடரே
வந்திடு மாற்றார் மனமது கலங்க
அமர்க்களம் தன்னில் அடலரி என்ன
வெஞ்சம ராடி வெற்றிபல கண்ட
அஞ்சா நெஞ்சுடை அருந்தமிழ் வீரனே
ஆண்மையும் வீரமும் ஆன்றகூர் மதியும்
எண்ணிய முடிக்கும் இணையிலா ஆற்றலும்
மலைநிலை பெயரினும் மனநிலை பெயரா
திண்ணிய உரனும் சீர்பெற அமைந்த
ஒப்பரும் தலைவ உவமையில் வீரனே
மாற்றார் குண்டதை மார்பினில் ஏந்தி
சாற்றரும் வீரத் தமிழன் என்பதை
தரணிக் குணர்த்திய தமிழ்மற மகனே
விண்ணவர் தமக்கு விருந்தின ஞக
நண்ணரும் வீர சுவர்க்கம் தன்னை
அடைந்தனை ஆயினும் அவனி மீது
நின்னரும் நண்பர் நெஞ்சகத் தென்றும்
உன்னரும் வீர உருவம் நிலைக்கும்
வானமும் வையமும் வாழும் வரைக்கும்
மான வீரஉன் மாண்பு நிலைத்திடுமே!

வரணி வடக்கு.

நண்பர்கள்.

(467)

---

### 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
**சின்னத்துரை பாலசுப்பிரமணியர்**

(Store - Keeper Cum Purchasing Officer
Asbestos Cement Industries Ltd. [Evenai]

தோற்றம்:
1939 - 07 - 20

மறைவு:
1989 - 04 - 12

எங்கள் இல்லத்தின் ஒளிவிளக்காகத் திகழ்ந்து எமக்கெல்லாம் வழிகாட்டி, ஆனைக்கோட்டை கிராமத்தை முன்னேற்றி, இவ்வூர் இளைஞர்களின் வாழ்க்கைக்கு வழிகாட்டிய அன்புத்தெய்வமே! நீங்கள் எம்மை எல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்டுவிட்டபோதும் எம் நெஞ்சங்கள் இருக்கும் வரை உங்கள் நினைவு எம்மை விட்டு நீங்காது. உங்கள் நாமம் நிலைக்க உங்கள் வழிகளை என்றும் பின்பற்றுவோம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக!

சமாதான நீதிபதி, ஆ. சின்னத்துரையும்,
(பெற்றோர்) பாரியாரும்,
திருமதி கமலாதேவி பாலசுப்பிரமணியரும்,
(மனைவி) பிள்ளைகளும்.

'அன்னவாசா'
உயரப்புலம்,
ஆனைக்கோட்டை.

(10880)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீட்டுத்தோட்ட போட்டி முடிவு

முல்லைத்தீவு, மே 12

முல்லைத்தீவு கமநலசேவை திணைக்களம்நடத்திய மாவட்டவீட்டுத் தோட்டப் போட்டிக்கான பரிசளிப்பு விழா கரிபட்ட முறிப்பு கனிஸ்ட மகா வித்தியாலயத்தில் முல்லைத்தீவு கமநலச்சேவை ஆணையாளர் திரு. செ. பஞ்சலிங்கத்தின் தலைமையில்நடைபெற்றது

முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திரு. க. பொன்னம்பலம் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

மாவட்ட ரீதியில் ஒட்டுசுட்டான் கமநலச்சேவை நிலையப் பகுதியைச் சேர்ந்த திரு. ரி. ரவீந்திரன் முதாவது பரிசான ரூபா 10,000 த்தையும் துணுக்காய் கமநல சேவை நிலையப்பகுதியைச் சேர்ந்த திரு. ஏ. நடராசா இரண்டாம் பரிசான ரூபா 5,000த்தையும் ஒலுமடுகமநல சேவை நிலையத்தைச் சேர்ந்த திரு. கே. திருச்செல்வம் மூன்றுவது பரிசான 2,500 ரூபாயையும் பெற்றுக் கொண்டனர்,

4 ஆம் 5 ஆம் 6 ஆம் இடங்களைப் பெற்றவர்களுக்கு பரிசில்களாகத் கைத் தெளிகருவிகள் வழங்கப்பட்டன,

இவ்விழாவில் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த உதவி விவசாயப் பணிப்பாளர் திரு. ஆர். இரகுபதி உட்பட கமநலக் குழுத் தலைவர்களும் பெரும்பாக உத்தியோகத்தர்களும் விவசாய முகாமையாளர்களும் கலந்து கொண்டு சிறப்புரை நிகழ்த்தினுர்கள். (ச-92)

## முல்லைத்தீவுக்கு பஸ்கள் கிடைக்கவில்லை

ஒட்டுசுட்டான், மே 12

வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்கு வழங்கப்படும் சொகுசு பஸ்கள் முல்லைத்தீவு டிப்போவுக்கு கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

வட பிராந்தியத்துக்கு வழங்கப்படும் பஸ்களில் முல்லைத்தீவு டிப்போவுக்கு மிக குறைந்த பஸ்களே வழங்கப்பட்டு வருவதாகவும் மறுசீரமைக்கப்பட்ட பஸ்கள் கூட வழங்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது,

முல்லைத்தீவு டிப்போ முழுமையான சேவையை நடத்த 25 பஸ்கள் தேவை எனவும் தற்பொழுது 11 பஸ்களையே சேவையில் ஈடுபடுத்தக் கூடிய தாசவுள்ளது எனவும் கூறப்படுகிறது.

இதனுல் முல்லைத்தீவு மாவட்டத்தில் போக்குவரத்தைச் சீர் செய்ய முடியாமல் இருப்பதாக டிப்போ அதிகாரி தெரிவிக்கின்ருர். [ச-113]

## யாழ் மாவட்ட கூட்டுறவுச் சபை

யாழ்ப்பாணம், மே 12

யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபையின் ஆரம்பக் கூட்டம் யாழ்ப்பாணத்தில் உள்ள சபை மண்டபத்தில் நடைபெற்றது.

சபையின் தலைவர் திரு.சி. சிவமகாராசா தலைமையில் நடந்த இக் கூட்டத்தில் உதவி கூட்டுறவு ஆணையாளர் திரு. செ. இ. நித்தியராஜ் கலந்து கொண்டார்.

பல்வேறுபட்ட கூட்டுறவு அமைப்புப்பிரதிநிதிகள் இதில் கலந்து கொண்டனர்.

தேசிய கூட்டுறவுச் சபையில் இருந்து பிரிந்து தனித்துவமாக இயங்கவுள்ள யாழ். கூட்டுறவுச் சபையின் மூலமாக கூட்டுறவு வங்கி நுகர்ச்சிப் பொருள் மொத்த விற்பனை நிலையம் காப்புறுதித் திட்டம் ஆகியவற்றை நடைமுறைப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

விரைவில் யாழ். மாவட்டத்தில் உள்ள பல்வேறு துறைகளிலும் உள்ள கூட்டுறவு அமைப்புக்கள்கொண்ட கருத்தரங்கு ஒன்றை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

தற்சமயம் வடக்கு கிழக்கு மாகாணத்தில் உருவாக்கப்படும் எட்டு மாவட்ட கூட்டுறவுச் சபைகளையும்இணைத்து தமிழ்ப்பகுதிக்கு பொதுவாக தனித்துவமாக இயங்கத்தக்க வகையில் அமைப்பு ஒன்றை உருவாக்கவும்முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (இ-3)

# ★ "கண்டு களியுங்கள்" கொடக்பிலிம் போட்டி ★

## முதலாவது இரு வாராந்தச் சீட்டிழுப்பில் வெற்றியீட்டியோர்

1. ஆர். எச். எம். அஜித் ராஜகுரு,
மாதன, யட்டகம, றம்புக்கனை.
2. ரமலா டி. சில்வா, 17/1, செல்ஸீ கார்டின்ஸ், கொழும்பு-3.
3. பிரேமலால் டி. ஆப்ரூ, காலி வீதி, கல்லமுல்ல, களுத்துறை.
4. ரி. கே. எஸ். ஐ சுமணவீர, ''செவன'' யாலேகம, இந்துருவ.
5. தர்மசிறி ஜயவர்தன, நொரகொல்ல, தால, இரத்தினபுரி.
6. தம்மிகா சந்திரவன்ஸ,
94, பராக்கிரம வீதி, கொழும்பு-4.
7. ஏ. எஸ். பிரியந்த பெரேரா,
96/15, கொட்டனுவத்தை வீதி, நுகேகொடை.
8. கே ஏ. ஜே. டயஸ், 680/1, பேராதனை வீதி, கண்டி.
9. ஜகத் சஞ்ஜீவ விக்கிரமநாயக்க. 515, உடகம, அம்பிட்டிய, கண்டி.
10. எம். வி. ஹரேந்திர பிரியந்த விஜயசேன,
81/1, பொன்சேக வீதி, பாணந்துறை.
11. பி, வி. தயானந்த, தபால் நிலையம், பெலிஹுலோயா.
12. கபில சூரியப்பெரும, மே/பா கருணசேன,
இடமல்கொட, மனுல வக.
13. நிமால் புண்ணியசிறி,
உயிரியல் இரசாயனப் பிரிவு, தேயிலை ஆராய்ச்சி நிலையம்,
தலவாக்கெல்ல.
14. தர்மசிறி ஜயவர்தன, நொரகொல்ல, தால, இரத்தினபுரி.
15. யூசுப் சுவைர், 25, 37 ஆம் ஒழுங்கை, கொழும்பு-6
16. என்; எல். அஜித்குமார், 'ரத்னகிரி' மகாவெல, அத்தம்பிட்டிய.
17. நிமால் டபிள்யூ, விஜேநாயக்க, 'விஜய' வவுலுகல, பத்தேகம.
18. எம். பாலித சில்வா,
கபில ட்ரேட் சென்ரர், மசனுசபிட்டிய, நீர்கொழும்பு.
19. டி. ஆர். கே. டி. சமரக்கோன்,
1/192, கல் அலுவ, மெனிக்கின்ன, கண்டி வழியாக.
20. சி. பெரேரா, 67, காலி வீதி, கொழும்பு-4
21. ரீட்டா ஜெனட் தஸநாயக்க,
140, அஸ்வத்தை வீதி, ஹிங்குரால, புவக்பிட்டிய
22. மேனகா எரந்த பியசேன,
73 ஏ, ஸ்ரீ அர்ஜுனராம மாவத்தை, மிரிஸ்வத்தை, கொட்டுகொட.
23. இந்திரஜித் செனவிரத்ன,
845/12, தொடங்சஹஹேன, சொத்தட்டுவ. முல்லேரியாவ.
24. அனுலா ஹேரத்,
பூட்டானி எக்ஸ்போர்ட்ஸ் லிமிட், ராஜகிரிய வீதி, ராஜகிரிய.
25. எம். எல். லோரன்ஸ் பெர்ணண்டோ,
457, தண்டுகம் தொட்டுப்பொல ஜா-எல.
26. பிரபாத் நாணயக்கார ஏ-1, ஸ்டுடியோ, கண்டி வீதி, நிட்டம்புவ.
27. பண்டார அம்பன்வெல,
''சமீரா போட்டோ'' ரி. 3. சாலிய, அசோகபுர, கல்கமுவ,
28. நிரஞ்ஜன் சின்கிளயர், ஆஸ்பத்திரி வீதி, மன்னர்.
29. சமிலா ரெஷான் ரணசிங்க, வெஹரகல சந்தி, பத்தட்ட, ஹுங்கம.
30. எஸ். வி. தனசேன, 'பவிலியன்' மொறவின்ன, பாணந்துறை.
31. கே. ஏ. ஜே. உதயசிறி,
3 ஈ, வேவல்துவ வீதி, ஹுணுப்பிட்டி, வத்தளை.
32. எம் இஸட். ஆரிப், 7, சௌக்கிய சதுக்கம், தெஹிவளை.
33. சரண மான்னக்கார, 'நுக செவன' தங்காலை.
34. மங்கல தேவிகா தமயந்தி,
'கீதாஞ்சலி' யாயேகெதற, பண்டார கொஸ்வத்தை.
35. பிரேமலால் டி. ஆப்ரூ, காலி வீதி, கலமுல்ல, களுத்துறை.
36. தர்மசிறி ஜயவர்தன, நொரகொல்ல, தால, இரத்தினபுரி.
37. டபிளியூ. விஜேசிங்க,
'ரூவன்' கலர் போட்டோ சேர்விஸ்,
'வேனுர' ஹட்டன் வீதி, வட்டவளை.
38. எம். ஐ. எம். முஸ்தோக்கீன்,
ஆண்டு 4, வகுப்பு 'சி', அல்ஹிரா வித்தியாலயம்,
பழைய வீதி, கட்டுநாயக்க (கி. மா).
39. எம். ஐ. எம். செனவிரத்ன,
12, தேவாலயக் குறுக்கு வீதி, சரிக்கமுல்ல, கெஸல்வத்தை,
பாணந்துறை.
40. எம். ஸராணி,
25, 37ஆம் ஒழுங்கை, கொழும்பு-6.
41. எம். எஸ். எம். நிஸார்,
69, கொங்கஹ வீதி, காலி.
42. டபிளியூ. ராஜரத்ன,
240, நாகலகம் வீதி, கொழும்பு-14.
43. எம். எச். சுஸந்த,
விமானப்படைப் பொறியியற் பிரிவு, இலங்கை விமானப்படை,
கட்டுநாயக்க.
44. வி. சி. கே. ஜே. முனசிங்க,
கொட்டபனுகொட, திப்பொட்டுவாவ, அக்குரஸ்ஸ.
45. எம். எஸ். விக்கிரமசூரிய,
16, ரத்னவில, மகா வீதி, வெலிகம.
46 சிந்தாமணி,
பிள்ளையார் கோவிலடி, நவாலி தெற்கு, மானிப்பாய், யாழ்ப்பாண
47. மஹிந்தரத்ன நிஸங்க,
முகலங்கமுவ, சீதுவ.
48. கல்யாண சந்திரசேகர,
ஷாமக போட்டோ, 1, லூர்து பிளேஸ், ஜா-எல.
49. சீதா வெலிகல,
ரேஹன ஸ்டுடியோ, ஹெட்டிப்பொல.
50. டி. வி. ஜினதாச,
83/2ஈ, எஹலபொல மாவத்தை, பட்டகெதற, இரத்தினபுரி.
51. கே. சிவசுப்பிரமணியம்,
10/8ஏ, 14ஆம் ஒழுங்கை, கொழும்பு-13.
52. உதய சாந்த,
பியசமர, மீவிற்றகம்மான, ஊராப்பொல.
53. டி. மைத்திரி கிரிந்த,
கிரிந்த, அட்டால.
54. ஆர். எம். முத்துபண்டா,
மதவத்தை, தெல்தவ, றம்புக்கனை.
55. ரவிக ஷாமலீ முத்துக்குட,
மே/பா. ஏ. பி. தென்னக்கோன், 12, மதவத்தை, தம்தெனிய.
56. ஸ்ரீ ஜனக மகேஷ் பெர்ணண்டோ,
312பி, பாதெட்டிய தெற்கு. காலி வீதி, பாணந்துறை.
57. டி. யசோரா லாலனி டி. சில்வா,
தாஸின்ஸ் புகைப்படப் பிடிப்பாளர், அம்பலாங்கொடை.
58. என். எல். அமிதா குமாரி,
ரத்னசிறி, மகாவெல, அத்தம்பிட்டிய, பண்டாரவளை வழியாக
59. ஜயந்த பந்துல அழகக்கோன்,
ஹீன்பெலவத்தை, பத்தேகம.
60. நிமலிக்கா சஞ்ஜீவனி வனிகசூரிய,
தொலகமுவ, (பொலிஸ் நிலையத்திற்குப் பின்னல்). ஹெட்டிபொல.
61. பஸ்மா ஆஸாத்,
245/19, காலி வீதி, கொழும்பு-4.
62 சுபாஷினி ரணசிங்க,
நிர்மலா, கொட்டல வீதி, ஹங்குரங்கெத்த.
63. பிரபாத் நாணயக்கார,
ஏ-1 ஸ்டுடியோ, கண்டி வீதி, நிட்டம்புவ.
64. ஆனந்த சூரியம்பொல,
8, வட்டகொட, தேவாலய வீதி, லேவல்ல, கண்டி.
65 கிஹான் சந்திரபால,
16/2, மசஸின் வீதி, பொரளை, கொழும்பு-8.
66. தனபால வீரசூரிய,
லங்கா வோல்டைல்ஸ் (பிறைவேட்) லிமிட், பலாங்கொடை.
67. யமுனு குருகே,
8, பெப்பிலியான வீதி, கங்கொடவில வீதி, நுகேகொடை.
68. பிமால் அஸங்க பண்டார சூரியம்பொல,
8, வட்டகொட தேவாலய வீதி, லேவல்ல, கண்டி.
69. ஏ. எம். மயூரி பிரியங்க விஜேசூரிய,
27, மாயா மாவத்தை, மஹரகம.
70. எல். டி. என். பெரேரா,
தெல்தெனிய, மகாவலத்தன்ன, பலாங்கொடை.
71. எல். ரி. சூரியாராச்சி,
ரேகா ஸ்டுடியோ, திஸ்ஸமஹராம.
72. ஜி. சி. நிமால் சாந்த,
'நிமால் செவன' மகாவெவ.
73. பிரியஞ்ஜன் சுரேஷ் டி சில்வா,
86/1, பழைய கொட்டாவ வீதி, மீரிஹான, நுகேகொடை.
74. நளின் ஜே. ஜயக்கொடி,
125/50, பீட்டர்ஸன் ஒழுங்கை, வெள்ளவத்தை.
75. எச். எஸ். பெர்ணண்டோ,
35, ஹேவாஹெட்ட வீதி, கண்டி.
76. மில்டன் ரணவீர,
90, பனலிய, பொல்காவலை.
77. சமந்தா டி. வகாராச்சி,
மனம்பெரி கெதற, ஹித்தட்டிய, மாத்தறை.
78. டபிளியூ. எம். பேர்ஸி பெர்ணண்டோ,
''பேர்ஸ் கலர் போட்டோ'' 65/6, சிங்கபுர, சிலாபம்.
79. சி. தயாவன்ச,
ஜி 1/5, சாஞ்சியாராச்சி கார்டினிஸ், கொழும்பு-12
80. சமிந்தி டி. லியனகே,
பட்டலந்தவத்தை, வல்பொல, இமதுவ.
81. என். குணரத்ன,
115, கிளப் வீதி, கேகாலை.
82. நிஷானி பெர்ணண்டோ,
193/பி, 7ஆம் குறுக்குத் தெரு, பொரப்பனை வீதி,
இரத்மலானை.
83. எஸ். ஏ. பிரியந்த பெரேரா,
96/15, கொட்டனுவத்தை வீதி. நுகேகொடை.
84. மனஹர விஜயவிக்கிரம,
4-ஏ, ஸ்டேஷன் வீதி, ஏகொட உயன, மொறட்டுவ
85. கே. வி. ஆர். விக்கிரமசூரிய,
'நுக செவன' பள்ளிக்குடாவ, தங்காலை.
86 ஏ. பி குணசேகர, 11/சி, தர்மபால மாவத்தை, காலி.
87. சுபாஷினி ரூபசிங்க,
நிர்மலா, கட்டலே வீதி, ஹங்குராங்கெத்த.
88. ஜி. பி. கபில சத்தமங்கல,
''இசுறுபாயா'' ரத்கம சந்தி, ரத்கம.
89. நயனு குலசிங்க, 71, மெயின் வீதி, நீர்கொழும்பு.
90. டபிளியூ. ஏ. சந்திரிகா,
107, கந்தலியத்தபாலுவ, கனேமுல்ல.
91. ஹேர்மன் ரூபசிங்க,
83, சிரிமல் உயன, இந்திகொல்ல, கம்பஹா.
92. ஹிரண்ய சேனநாயக்க,
''சீவலி'' தீயாவ, கம்புக்வெவ. இப்பாகமுக வழியாக.
93. ஹந்துன் தேநுவர,
தபால் நிலையம், திஸ்ஸமஹராம.
94. ஜி. குணரத்ன,
16, பழைய ஸ்டேசன், திருகோணமலை.
95. சாகர புஷ்பகுமார் லியனகே,
'விஜித்' ஜம்புகஹஹேன, நவத்தகல.
96. எஸ். லோகநாதன், 32,எம். ரி. எஸ். தெல்தொட்ட.
97. இந்திரஜித் செனவிரத்ன,
845/12, தொடம்சஹவெல, கொத்தட்டுவ, முல்லேரியா.
98. எம். ரி, எம். ஸனுயிர், 158, நாகலகம் வீதி, கொழும்பு-14
99. செனவிரத்ன தகநாயக்க,
ஹேனகெதற, பாஹுனுபொல, இப்பாசமுவ.
100. ஜி. கே. அம்பேபிட்டிய, 1/4, அளுத்மாவத்தை, மாத்தறை.

**வெற்றியீட்டியோர் தமக்குரிய பரிசுகளைப்பெற மே 31ஆம் திகதிக்கு முன் மில்லர்ஸ் லிமிட்டெட்டிற்குச் செல்லும்படி தயவாய்க் கேட்கப்படுகின்றுர்கள்.**

## கொடக் பொருட்களின்
ஏக விநியோகஸ்தர்:
# மில்லர்ஸ் லிமிட்டெட்

PRODUCTS BY Kodak

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# LONDON EXAMS

**NOV - DEC. 1989**

சனி, ஞாயிறு வகுப்புகள்

**ஆரம்பம்: 03- 06- 1989**

- ✶ CIMA - Stages I & II
- ✶ IDPM - Part 1
- ✶ AAT (Sri Lanka) Stages I, II, & III (English & Tamil Medium)
- ✶ IAB - Foundation, Inter & Final Pitmans Book - Keeping

தகைமையும், திறமையும், ஆற்றலும், அனுபவமும் வாய்ந்த போதனையில் சாதனை புரியும் முன்னணி விரிவுரையாளர்களின் ஒருங்கிணைந்த சேவை.

கொம்பியூட்டர் வகுப்புகளும் நடைபெறுகின்றன.

மேலும் விபரங்களுக்கு:-

**CANTABIA INSTITUTE**
**No. 21, Main Street,**
**JAFFNA.**

(C/2553)


அம்பாறை மாவட்ட

# மல்வத்தை தமிழ் பிரதேசத்தில் விவசாயிகள் பெரிதும் பாதிப்பு

## 1400 ஏக்கர் நிலம் கைவிடப்பட்ட நிலையில்

கல்முனை, மே 12

அம்பாறை மாவட்ட மல்வத்தை தமிழ்ப் பிரதேசத்தைச் சேர்ந்த தொட்டாச்சுருங்கிவட்டை, மலையடி வட்டை, வரம்பு வளைந்த வட்டை, கரங்கா வட்டை ஆகிய 1400 ஏக்கர் விவசாய நிலத்தில் விவசாயம் செய்து வந்த தமிழ் விவசாயிகள் கடந்த ஆறுவருடங்களாக விவசாயம் செய்ய முடியாது கஷ்டமுறுகின்றனர்.

இப்பிரதேசத்தை அண்மி உள்ள பெரும்பான்மை இனத்தவர்களினதும், பௌத்த பிக்கு ஒருவரினதும், இலங்கைப் படையினரதும் போக்குகளினுலேயே விவசாயம் செய்யமுடியாத நிலைக்கு மேற்படி விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர்

1983 ஆம் ஆண்டு ஏற்பட்ட வன்செயல்களுக்குப் பின்னர் விவசாயத்தில் ஈடுபட்டிருந்த தமிழ் விவசாயிகள் படையினராலும், பெரும்பான்மை இனத்தவர்களாலும் அடித்தும், பலாத்காரமாக நெற்கதிர்களை அறுவடை செய்தும் வந்ததால் இப் பிரதேச விவசாயிகள் பாதிப்படைந்துள்ளனர்.

1964, 65 ஆம் ஆண்டுகளில் இவ் விவசாயிகளுக்கு காணிகளுக்கான 'பெர்மிட்'கள் வழங்கப்பட்டும் சுதந்திரமாக விவசாயம் செய்ய முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது குறித்து முஸ்லிம் தமிழ்ப் பிரமுகர்களோ, அரசியல்வாதிகளோ எந்தவித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை.

இதனுல் பெரிதும் பாதிப்படைந்துள்ள நூற்றுக்கு மேற்பட்ட விவசாயிகள் விடயமாக அம்பாறை மாவட்ட விவசாயிகள் சங்கத்தின் செயலாளர் நாயகம் திரு. கே இராமநாதன் வடக்கு கிழக்கு மாகாண அரசுக்கும் மகஜர் அனுப்பி வைத்துள்ளார்.

(இ-84)

# ஆசிரியர் அதிபரை மதிக்க வேண்டும் அதிபர் ஆசிரியரை நேசிக்க வேண்டும்

## முன்னுள் கல்லூரி அதிபரின் அறிவுரை

மானிப்பாய், மே 12

ஆசிரியர்கள், அதிபர்களை மதித்து நடக்க வேண்டும். அதிபர் ஆசிரியரை நேசிக்க வேண்டும். இரு பகுதியினருக்கும் இடையில் கோபமும் வஞ்சகம் தீர்க்கும் மனப்பாங்கும் இருப்பின் நிர்வாகம் திறம்பட அமையமாட்டாது''

முன்னுள் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபரும், ஒறேற்றர் சி. சுப்பிரமணியம் மேற்கண்டவாறு கூறினுர்.

ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் பல ஆண்டுகள் ஆசிரியராக இருந்து இளைப்பாறும் ஆசிரியர் திரு. எஸ். ஞானச்சந்திரமூர்த்திக்கு அளிக்கப்பட்ட தேநீர் விருந்துபசாரத்தின் போதே அவர் இவ்வாறு கூறினுர்.

கல்லூரி அதிபர் திரு. பி நாகரத்தினம் வைபவத்துக்கு தலைமை வகித்தார்.

ஒறேற்றர் சுப்பிரமணியம் மேலும் பேசுகையில் ஆசிரியர்களின் பிரச்சினைகளை அறிந்தவர்களாக அதிபர்களும் அதிபர்களின் கருத்துக்களை புரிந்து கொண்டவர்களாக ஆசிரியர்களும் விளங்கினுல் பாடசாலை முகாமைத்துவத்தை சிறந்த முறையில் செய்யலாம்'' என்று கூறினுர்.

திரு. எஸ். ஞானச்சந்திரமூர்த்தி ஆசிரியர் நன்றி தெரிவித்து உரையாற்றினுர்.

(க-90)

## பதில் அதிபர்

சாவகச்சேரி, மே 12

அகால மரணம் அடைந்த மீசாலை விக்னேஸ்வர மகா வித்தியாலய அதிபர் திரு க. செல்லத்துரையின் இடத்துக்கு ஆசிரியர் திரு. கே' சுப்பிரமணியம் பதில் அதிபராக நியமனம் செய்யப்பட்டார். (ச-31)


# ★ கம்பியூட்டர் கல்வி ★

**DIPLOMA IN COMPUTER PROGRAMMING & DATA PROCESSING**

**BASIC**
4 MONTHS
**WEEK ENDS**

Commencement: 20. 05: 1989 at 1.00 p. m

LECTURES BY: MEMBERS OF THE INSTITUTE OF DATA PROCESSING MANAGEMENT (LONDON)

Practicals on Computers Including I. B. M. (compatibles)

**Fees Only Rs. 300/- Per Month**

**SCHOOL OF BUSINESS ADMINISTRATION**
(LEADERS IN COMPUTER EDUCATION)
16, 3rd Cross Street, JAFFNA.

(C/2550)



**A/L விஞ்ஞான மாணவர்களுக்கு**

**90 ● HEAT ●**
Sat & Sun - 10. 30 — 11. 30
ஆரம்பம்: 13. 05. 89
ஆசிரியர்: Mr. ரவீந்திரநாதன் B. Sc. (Hons)
3 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

(C/2551)


## Thanks giving Service

A Service of Thanks giving for the life of:-
**Samuel Ariarajah Handy**
will be held on Saturday the 13 th of May, 89 at 4 p. m. at.

No. 46, 1st St. Annes Lane,
Kachcheri East Lane,
Chundikuli.

(10887)


# ★ சவூதி அரேபியா ★

விரைவாகப் பயணம் செய்ய

A. C. வேலை 800+100 S. R.
மின்சார வேலை 600+100 S. R.
பாதுகாவலர் 500+100க்கும்

மற்றும் நேர்முகப் பரீட்சைக்கு
தச்சுவேலை, மேசன்வேலை, மின்சார வேலை, சாரதி, பொதுவேலைகள் உட்பட உள்ளது.

தொடர்பு:

**மதுரா ரவல்ஸ்**

93, பலாலி வீதி (சங்கக்கடைவளவு)
கந்தர்மடம், யாழ்ப்பாணம்

[470]



**MODERN EDUCATION CENTRE**
**KARAVEDDY**

ஆண்டு 5
புலமைப்பரிசிலுக்கான பயிற்சி வகுப்புகள்
ஆரம்பம்: 14- 05- 1989 ஞாயிறு

வகுப்புகள்:
திங்கள், புதன், வெள்ளி, ஞாயிறு
4 - 5 மொழி — 5 - 6 கணிதம் நடைபெறும்.

(462)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

## கொழும்பில் இருந்து பொருட்களை ஏற்றி வருவதற்கான: கூறு விலைகள்

கொழும்பில் இருந்து யாழ். பல்கலைக்கழக களஞ்சியத்திற்கு பொருட்கள் ஏற்றி வருவதற்கு அனுபவமுள்ள லொறி உரிமையாளர்களிடம் அல்லது லொறி போக்குவரத்து முகவர்களிடம் இருந்து கூறுவிலைகள் கோரப்படுகின்றன

1. கூறுவிலைகள் அனுப்புபவர்கள் தமது கொழும்பு முகவரியையும்யாழ்ப்பாண முகவரியையும் தெளிவாக எழுத வேண்டும். அத்தோடு கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் போதிய அளவு களஞ்சிய வசதி உள்ளவர்களாக இருத்தல் வேண்டும்.
2. உங்களிடம் உள்ள லொறிகளின் எண்ணிக்கையையும் குறிப்பிட வேண்டும்.
3. கூறுவிலைகள் லொறியில் ஏற்றுவதற்கும் களஞ்சியசாலையில் இறக்குவதற்கும் ஆன கூலிகளை உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும்.
   - (அ) கொள்கலன் அளவில் கொண்டு வருவதற்கான கட்டணம்.
   - (ஆ) காட்போட் பெட்டி ஒன்றுக்கான கட்டணம்.
   - (இ) மரப்பெட்டி ஒன்றுக்கான கட்டணம்.
   - (ஈ) ஒரு லொறி லோட் நிறைந்த பொருட்களுக்கான கட்டணம்.
   - (உ) ½ லொறி லோட் நிறைந்த பொருட்களுக்கான கட்டணம்.

என்ற வகையில் நிரல்படுத்தி கூறுவிலைகளை நிதியாளர், யாழ். பல்கலைக்கழகத்துக்கு எதிர்வரும் 19-05-1989 திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடிய வகையில் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்பட வேண்டும். அனுப்பப்படும் சகல விண்ணப்பங்களும் அதன் கடித உறையின் இடது மூலையில் ''Tender for Lorry Transport'' என எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

பதிவாளர்.

(சி-2543)


# ★ வேலைவாய்ப்பு லிபியா ★

தலைமை அலுவலகம்; கிளை:

**ந. பாஸ்கரன் J.P, இந்திராணி ஏஜென்ஸி**

18 1/4 முதலிகே மாவத்தை, கொழும்பு - 1.　　நெல்லியடி, கரவெட்டி.

சம்பளம் 8 மணித்தியாலயம்
ஓவரைம் உண்டு

| | | | |
|---|---|---|---|
| 1. | மெக்கானிக்ஸ் - டீசல் லொறி | — 9500 — 10, 500 | ரூபா வரை |
| 2. | மெக்கானிக்ஸ் - புல்டோசர், கிறேன் | — 9500 — 10, 500 | ,, |
| 3. | எலற்றிசன் - இயந்திர இணைப்புகள் | — 9500 — 10, 500 | ,, |
| 4. | ஓவகெட்லைன்ஸ்மென் | — 9500 — 10, 506 | ,, |
| 5. | மோட்டார் வைண்டர்ஸ் | — 9500 — 10, 500 | ,, |
| 6. | ஏயர்கொண்டிசன் திருத்துபவர் | — 9500 — 10, 500 | ,, |
| 7. | எலக்ரிக்கல் எஞ்சினியர் | — 20,000 | ரூபா |
| 8. | தச்சுவேலை தெரிந்தவர்கள் | — 9500 | ,, |
| 9. | மேசன் வேலை | — 9500 | ,, |
| 10. | வெல்டிங் வேலை | — 9500 | ,, |
| 11. | பாபெண்டர்ஸ் (கம்பி வளைத்தல்) | — 9500 | ,, |

முக்கிய கவனிப்பு:- பாஸ்போட், 4 படங்கள், சான்றிதழ்களுடன் கீழ்க்காணும் விலாசங்களில் குறிப்பிட்ட நேரங்களில் மட்டும் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும். உடன் வரவும்.

12 - 5 - 89 வெள்ளிக்கிழமை காலை 9. 00 -- 12. 00 மணி வரை
இல. 208, கஸ்தூரியார் றேட், யாழ்ப்பாணம்.

13 - 05 - 89 சனிக்கிழமை காலை 9. 00 — 4. 00 மணி வரை

சிவ பவனம்,
கிறிஸ்ரி லேன்,
மெயின் ஸ்றீட், காங்கேசன்துறை.
(சீமெந்து தொழிற்சாலை அருகில்)

(471)


# 31 ஆம் நாள் அஞ்சலி

(அந்தியேஷ்டி)



தோற்றம்:
1924. 01. 02

மறைவு:
1989. 04. 12

## திரு. மயில்வாகனம் சுப்ரமண்யம்

[சாரதி]

ஆண்டு விபவவீற்றுப் பூர்வபக்கச் சப்தமியில்
வேண்டா திவ்வுலக வாழ்வுவிட்டு - மீண்டும்
பிறவாப் பேறெய்த வைகுந்த பதிநோக்கி
உறவாகினுன் மயூர, சுப்ர,மண்யன்!
ஆண்ட பெரு அரசெல்லாம் என்ன ஆச்சு?
ஆதலினுல் அன்புடனே, பிரேமை, சாந்தி
ஆண்டாண்டு மழியாச் சத்யம் பூண்ட ஹிம்சையாகி
கூண்டு விட்டுப் போமளவும் குலம் விளங்க வாழீர்!
மீண்டும் பிறப் பிறப்பு பூண்ட நரகதனில்
வேண்டும் சிவயோக வேத அனுபூதி, இவை
பூண்டு விட்டி லாணவ மாயமருளகலும்
வேண்டாம் போலி, வேண்டும் சாந்தி! சாந்தி!

ஆறுதல் தேறுதலளித்த உறவுற்ருர் நட்பெல்லார்க்கும்
கூறுதல் நன்றி, நன்றி யெம் கடனே!

அன்னுரின் குடும்பச்சார்பில்
சு. இளங்கோ,
கரவெட்டி.

1989 - 05 - 12

(469)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யா மொழி

**குறள்:**
கவறும் கழகமும் கையும் தருக்கி
இவறிலார் இல்லாகி யார்.

**பொருள்:**
சூதாடு கருவியும் ஆடும் இடமும் கைத்திறமையும் மதித்துக் கைவிடாதவர், (எல்லாப் பொருளும் உடைவராக இருந்தும்) இல்லாதவர் ஆகிவிடுவர்,

உதயன்

இல: 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 24805 22073
12 - 05 - 1989 த. பெ. இல: 23

# பிறந்த நாள் பரிசு!

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விரிவுரையாளரும், இலக்கிய ஆய்வாளரும், நல்ல விமர்சகருமான கலாநிதி நா. சுப்பிரமணியன் மிகச் சிறப்பான ஆலோசனை ஒன்றைத் தெரிவித்திருக்கிறார்.

மானிப்பாயில் நடந்த, ''காட்டில் ஒரு வாரம்'' என்ற சிறுவர் இலக்கிய நூல் அறிமுக விழாவில் கலந்து கொண்டு, அவர் தெரிவித்த கருத்து வரவேற்கத் தக்கது. எல்லோரது கவனத்தையும் ஈர்க்க வேண்டியது. சகலரும் மனம் செலுத்திச் செயல் வடிவம் கொடுக்க வேண்டியது.

சிறுவர்களின் பிறந்த நாள் நிகழ்ச்சிகளுக்குச் செல்லும் உறவினர்கள், நண்பர்களின் பெற்றோர்கள், உணவு, உடை வகைகளையே இப்போது அன்பளிப்புப் பொருள்களாக வழங்குகின்றனர். அவற்றுக்குப் பதிலாக சிறுவர்களுக்குப் பயன்படக் கூடிய அறிவு நூல்களை அன்பளிப்புச் செய்யவேண்டும் என்பதே கலாநிதி அவர்களின் ஆலோசனை ஆகும்.

சிறுவர்களின் பிறந்த நாள் வைபவத்தைக் கொண்டாடுவது இப்போது வீடுகளில் நடைபெறும் சாதாரண நிகழ்ச்சியாகிவிட்டது. முன்னர் ஒரு காலத்தில் தான், பிறந்த நாள் கொண்டாட்டம் பெரிய இடத்துச் ''சமாச்சாரமாக'' இருந்தது. பணத்தை அளவுக்கு அதிகமாகச் செலவு செய்யும் தமாஷா நிகழ்ச்சியாகவும் விளங்கியது.

இப்போது அப்படியல்ல. ஒவ்வொரு பெற்றோரும் தத்தமது இயல்புக்கு ஏற்ப, வீட்டுக்கு அடக்கமாகக் கொண்டாடும் நிகழ்ச்சியாகி விட்டது அது. ஆகக் குறைந்தது ஆலயத்தில் ஓர் அர்ச்சனையாவது செய்து இளசுகளின் பிறந்த நாள் நினைவு கூரப்படுகிறது, கொண்டாடப்படுகிறது.

அடக்கமாக, எளிய முறையில் கொண்டாடப்படும் பிறந்த நாள் நிகழ்ச்சிகளில் கூட ஆகக் குறைந்த ஐந்து பிறந்த நாள் அன்பளிப்புகளாவது வந்து சேரும். அந்த அன்பளிப்புக்களில் அனேகமானவை 'சொக்லேட்' போன்ற இனிப்புப் பண்டங்களாகவோ, அல்லது உடுபுடைவை வகைகளாகவோ அல்லது விளையாட்டுப் பொருள்களாகவோ இருப்பதையே காண்கிறோம்.

இந்த மூன்றில் ஒன்றுக்குப் பதிலாக சிறுவர்களின் அறிவுத் தேட்டத்துக்கு உதவக் கூடிய நல்ல நூல்களை அன்பளிப்புச் செய்யவேண்டும் என்பதே கலாநிதி சுப்பிரமணியனின் புதிய ஆலோசனையாகும்.

இதனை ஓர் அற்புதமான, பயனுள்ள யோசனை என்று கூறுவதோடு நிற்காமல் அதனைச் செயற்படுத்த வேண்டும். எல்லோரும் கடைப்பிடிக்க வேண்டும் என்பதையே இங்கு வலியுறுத்த விரும்புகிறோம்.

சிறுவர்கள் விரும்பிப் படிக்கக் கூடிய, அதே வேளை அவர்களின் அறிவு விருத்திக்கும், மன வளர்ச்சிக்கும், நற்பண்புகளை வித்திடவும் வகை செய்யும் சிறுவர் இலக்கிய நூல்களை, சமய சம்பந்தமான நூல்களை, பொது அறிவை வளர்க்கும் நூல்களை அன்பளிப்புச் செய்ய வேண்டும்.

பாடப் புத்தகங்களைக் கற்பதால் மட்டும் சிறுவர்களின் கல்வியை வளம்படுத்த முடியாது; செழிப்புறச் செய்ய இயலாது. மேலதிக துணை நூல்கள், உப நூல்களை வாசிப்பதன் மூலமே அவர்களிடம் பரந்த அறிவுப் பரப்புக்கு அத்திவாரம் இடமுடியும்.

சிறுவர்களின் உளவியல் வளர்ச்சிக்கு உதவக்கூடிய நூல்கள் தமிழில் மிகக் குறைவு என்ற நிலையை ஒப்புக் கொள்ளவேண்டியுள்ளது. அவ்வாறான நூல்களுக்கு ஆதரவு தரப்பட்டால் மட்டுமே அவற்றின் எண்ணிக்கையை உயர்த்தலாம் என்பதே உண்மை நிலை. விற்பனைச் சந்தையை, கிராக்கியைப் பொறுத்தே நூல்களை வெளியிடலாம் என்ற அளவுக்கு அச்சிடும் செலவுகள் உயர்ந்துள்ள காலம் இது. ஆகவே சிறுவர் நூல்கள் அதிக எண்ணிக்கையில் வெளிவர வேண்டுமானால் அவற்றுக்குச் சந்தை வாய்ப்பு உண்டாகும் விதத்தில் ஊக்குவிப்புகள் அவசியம்.

ஈழத்தில் சிறுவர் அறிவு நூல்கள் பெருக வேண்டுமானால் அவற்றுக்கு பெற்றோரின் ஆதரவு தேவை, பிறந்த நாள் நிகழ்ச்சிகளில் சிறுவர்களுக்குப் பயனுள்ள நூல்களை அன்பளிப்புச் செய்வது போன்ற நடைமுறைகள் தரமான நூல்கள் வெளிவர பெரிதும் உதவும்.

அத்தோடு சிறுவர்கள் தமக்கென ஒரு '' குட்டி '' நூலகத்தை வீட்டில் நிறுவவும் வாய்ப்பு உண்டாகும் அல்லவா? அந்த நூலகம் குறிப்பிட்ட சிறுவன் வளர்ந்த பின்னரும் அவனது சகோதரர்கள், ஏன் பிள்ளைகளுக்குக் கூட அறிவு வளர்ச்சிக்கு உறுதுணையாக விளங்கும்.

இது விடயத்தில் பெற்றோர்கள், பெரியவர்கள் உரிய கவனம் எடுத்து, மனம் வைத்துச் செயற்பட வேண்டும். அது பல்வழிப் பயன்களை விளைக்கும். பரம்பரை பரம்பரையாக அறிவு வளர்ச்சிக்கு உறுதுணை புரியும்,

# யுனெஸ்கோவிலுள் சேர்வதற்கு பி. எல். ஓ. தீவிர முயற்சி

பாரிஸ், மே 11

யுனெஸ்கோ ஸ்தாபனத்திலும் சேர பலஸ்தீன விடுதலை இயக்கம் விண்ணப்பத்தை அனுப்பியுள்ளது.

பூரண உறுப்பு அந்தஸ்து பலஸ்தீன நாட்டுக்கு அளிக்கப்படவேண்டும் என்று பலஸ்தீன விடுதலை இயக்கம் கேட்டுள்ளது.

ஏற்கனவே உலக சுகாதார ஸ்தாபனத்தில் சேருவதற்கு பலஸ்தீன விடுதலை இயக்கம் அனுப்பிய விண்ணப்பத்தை பரிசிலனைக்கு எடுத்துக்கொள்வது என்று ஸ்தாபனத்தின் பொதுச்சபை தீர்மானித்துள்ளது.

இதனை அமெரிக்கா கடுமையாக எதிர்க்கிறது. [எ]

## நேபாளத்தின் புதிய அமெ. தூதர்

வாஷிங்டன, மே 11

நேபாளத்தின் புதிய அமெரிக்கத் தூதராக திருமதி ஜூலியா சாங் புளொக் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

இவர் சீன வம்சாவளியைச் சேர்ந்தவர்.

ஆசிய- பசுவிக்-அமெரிக்கப் பாரம்பரிய வாரம் சம்பந்தமான கொண்டாட்டத்தை அங்குரார்ப்பணஞ் செய்து வைத்துப் பேசுகையில் அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் இந்த அறிவிப்பை வெளியிட்டார். (எ)

# இந்திய-பாக். எல்லையில் நெருக்கடி;

## கூடுதல் படைகளை புதுடில்லி அனுப்பியது

### சியாசென் பிரதேசத்தில் பதற்ற நிலைமை

ஸ்ரீநகர், மே. 11

சியாசென் பனிமலைப் பிரதேசத்துக்கு இந்தியத்துருப்புக்கள் கூடுதலான அளவில் அவசரமாக அனுப்பி வைக்கப் பட்டுள்ளனர்.

இந்திய- பாகிஸ்தான் எல்லைப்புறத்தில் லடாக் பிரதேசத்தில் சியாசென் பனிமலைப் பிரதேசம் உள்ளது.

பாகிஸ்தான் படையினர் அப்பகுதியில் புதிதாக இரண்டு காவல் நிலையங்களை அமைத்திருக்கின்றனர்.

அதைத் தொடர்ந்தே இந்தியா இந்த அவசர நடவடிக்கையை எடுத்திருக்கிறது.

புதிய காவல் நிலையங்களில் இருந்து பாகிஸ்தான் படையினர் 24 மணித்தியாலங்களாக ஷெல் தாக்குதலை நடத்திய வண்ணம் இருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

லடாக் பிரதேசத்துடனை இந்தியத் தொலைத்தொடர்புகளைத் துண்டிப்பதற்காகவே பாகிஸ்தான் இந்த ஷெல் தாக்குதலை ஆரம்பித்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

இதனைத் தடுத்துநிறுத்தவே இந்தியா கூடுதல் படைகளை அப்பகுதிக்கு அனுப்பி வைத்துள்ளது.

மேற்குப் படைப் பிரிவுத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் பி. சி. நந்தா சியாசென் பிரதேசத்துக்கு விஜயம் செய்து விட்டு திரும்பிய பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசினர்.

நெருக்கடி நிலையைத் தணிக்க பாகிஸ்தான் படை அதிகாரிகளுடன் பேச்சுக்களை கடந்த சனிக்கிழமை நடத்த இந்தியா ஏற்பாடு செய்திருந்தது. ஆனல் அது பலனளிக்கவில்லை. பதிலாக எமது பிரதேசத்தை நோக்கி பாகிஸ்தான் படையினர் தொடர்ந்து ஷெல் தாக்குதலை நடத்துகின்றனர்.

இப்படி லெப். ஜெனரல் நந்தா சொன்னர்.

லெப்டினன்ட் ஜெனரல் நந்தா மேலும் சொன்னதாவது:

இந்தியத் துருப்புக்கள் 6 ஆயிரம் அடி உயரத்தில் நிலை கொண்டிருக்கின்றனர். பாகிஸ்தான் படையினரின் தாக்குதலை நாம் முறியடிப்போம். ந்தகேந்திர நிலையில் இருந்து இந்தியத்துருப்புக்களை வெளியேற்றச் செய்ய முடியாது.

இந்தியத் துருப்புக்களுக்கு நவீன ஆயுதங்கள் வழங்கப் பட்டுள்ளன.

இஸ்லாமபாத்தில் வருகிற வாரம் (14-05-1989) நடத்தப் படவுள்ள பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் மட்டத்திலான இந்திய - பாகிஸ்தான் மாநாட்டில் பாகிஸ்தான் புத்திசாலித்தனமாக நடந்து கொள்ளும் என நம்புகின்றேன்.

இப்படி ஜெனரல் நந்தா சொன்னர்.

நாட்டின் பாதுகாப்பு குறித்து இந்தியப் படைகள் உஷார் படுத்தப்பட்டுள்ளது என்று அமைச்சு தெரிவித்தது.

கடந்த டிசம்பரில் இந்திய எல்லைப்புறத்தில் உள்ள கராக்கோரம் மலைத்தொடர் பிரதேசத்தில் சீனத்துருப்புக்களும் தங்கள் பயிற்சிகளை நடத்தின என்றும் அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன. [எ]

★ பனமா அரசியல்:

# ஜனதிபதி தேர்தல் முடிவு ரத்து ராணுவத் தளபதி அறிவிப்பு

பனமாநகரம், மே 11

பனமாவின் ஜனதிபதி தேர்தல் செல்லும்படியாகாது என்று இராணுவத் தளபதி ஜெனரல் நொரியாகோ நேற்று அறிவித்தார்.

கடந்த வாரம் நடந்து முடிந்த ஜனதிபதித் தேர்தலில் ஜெனரல் நொரியாகோவின் ஆதரவாளரான வேட்பாளர் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

உண்மையில் எதிர்க்கட்சி வேட்பாளரே வெற்றி பெற்றதாகவும் ஜெனரல் நொரியாகோ தேர்தல் மோசடியில் ஈடுபட்டதாகவும் சுதந்திரமான முறையில் தேர்தலைக் கண்காணிக்கச் சென்ற அவதானிகள் குழு கருத்து வெளியிட்டது.

அதைத் தொடர்ந்து எதிர்க்கட்சி வேட்பாளரின் வெற்றியை ஏற்கும்படி அமெரிக்கா ஜெனரல் நொரியாகோவை வற்புறுத்தியது.

இந்த நிலையில் தேர்தலை செல்லுபடியாகாது என்று ஜெனரல் நொரியாகோ அறிவித்திருப்பது, பனமா அனுபவித்து வரும் 3 ஆண்டுகால அரசியல் நெருக்கடியை தீவிரப்படுத்தி உள்ளது.

இதேவேளை, பனமாவில் இடம் பெறுவதை தீவிரமாகக் கண்காணித்து வருவதாக அமெரிக்க அதிபர் புஷ் அறிவித்து இருக்கிறர். (எ)

# சீதனப் பிரச்சினைக் கொலைகள் புதுடில்லியில் அதிகரிப்பு

புதுடில்லி மாநகரில் சீதனப் பிரச்சினை காரணமாக இளம் பெண்கள் கொலை செய்யப் படுவது அதிகரித்து உள்ளதாக லோக சபையில் தெரிவிக்கப்பட்டது.

1988 ஆம் ஆண்டில் 71 இளம் பெண்கள் தீக்கிரையாகி மாண்டனர். 1987 இல் இப்படி இறந்தவர்களின் எண்ணிக்கை 59 என்று இணை அமைச்சர் பி சிதம்பரம் லோக சபையில் தெரிவித்தார். [எ]

## லண்டன் விமான விபத்து

மியூனிச், மே 11

பிரிட்டனில் லொக்கர்ப்பி என்னுமிடத்தில் பான் ஆம் விமானம் ஒன்று கடந்த டிசம்பரில் விபத்துக்குள்ளாகியதில் 259பேர் மரணமடைந்தனர் அல்லவா!

அந்த விமானம் ஈரான் அரசின் உத்தரவின் மீது தான் குண்டு வைத்துத் தகர்க்கப் பட்டது என்று மேற்குஜேர்மன் வார சஞ்சிகை 'குவிக்' தகவல் வெளியிட்டிருக்கிறது.

ஈரான் அரசு பணம் கொடுத்து தீவிரபலஸ்தீனக் குழு ஒன்றின் மூலம் விமானம் தகர்க்கப்பட்டதாகவும் அச்செய்தியில் தெரிவிக்கப் பட்டது. (எ)

## ஜனதிபதி தேர்தல்

புவனர்ஸ் அயர்ஸ், மே 11

ஆர்ஜென்ரீனவில் ஜனதிபதித் தேர்தல் வருகிற ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. (எ)

## அமைச்சர்களுக்கு அ. தி. மு. க. கறுப்புக்கொடி

கோயம்புத்தூர், மே 11

தி.மு.க. அமைச்சர்கள் பொன்முடி, பொன். முத்துராமலிங்கம் ஆகியோருக்கு கோயம்புத்தூரில் வைத்து அ.தி.மு.க. தொண்டர்கள் கறுப்புக்கொடி காட்டினர்.

# தாட்சர் அரசு எதிர்ப்பு கூட்டணி தொழிற் கட்சி நிராகரிப்பு

லண்டன், மே 11

சமூக ஜனநாயகக் கட்சியுடன் சேர்ந்து அரசு எதிர்ப்பு ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்ள தொழிற் கட்சி மறுத்து விட்டது.

தொழிற்கட்சி தலைமையிலான கூட்டு அரசாங்கத்திலை பணியாற்றத் தான் தயாராக இருப்பதாக சமூக ஜனநாயகக்கட்சித் தலைவர் டாக்டர் ஓவன் முன் வந்ததைதொழிற் கட்சி நிராகரித்து விட்டது.

## மொரொக்கோவில் பொதுமன்னிப்பு

ரம்ழான் பெருநாளை ஒட்டி மொரொக்கோ மன்னர் ஹஷன் 228 அரசியல் கைதிகளுக்கு பொதுமன்னிப்பு அளித்தார். விடுவிக்கப்பட்டவர்களில் 178 பேர் அரசு ஊழியர்கள். (எ)

# அமரர் வித்தியானந்தன் பேதமின்றி சகலருக்கும் உதவிய பண்பாளர்

### யாழ் பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேச்சு

யாழ்ப்பாணம், மே 12

'அமரர் வித்தியானந்தன் வித்தியாசமில்லாமல் சகலருடனும் சகஜமாகப் பழகும் பண்புள்ளவர். எவருக்கும் உதவி செய்யும் பண்பு அவரிடம் ஊறியிருந்தது. அவர் எதிர்த்தவர்களுக்கும் உதவினர். அவருக்கு எதிரிகள் என்று எவரும் இருக்கவில்லை'

இப்படிக் கூறினர் யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் ந. பாலகிருஷ்ணன்.

அமரர் உபவேந்தர் சு. வித்தியானந்தனின் உருவப் படம் யாழ் பல்கலைக்கழக பொதுஅறையில் புதன்கிழமை மாலை பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜாவால் திறக்கப்பட்ட பின் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றும்போதே கலைப்பீடாதிபதி இப்படிக் கூறினர்.

பல்கலைக்கழக விரிவுரையாளர் எஸ். ஞானகுமாரன் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் கலைப்பீடாதிபதி மேலும் பேசுகையில் கூறியதாவது;

சகலருடனும் ஒரேவிதமாகப் பழகும் பண்பு அவரிடம் நிலைறந்து இருந்தது.

ஆராய்ச்சி, கற்பித்தல், மேடைப் பேச்சு ஆகியவற்றில் அவருடைய இடத்தை இனி எவராலும் எடுக்க முடியாது.

தமிழ்க் கலாசாரம், தமிழ் மொழி, தமிழ் நாடகம் ஆகியவற்றுக்கும் அவர் அருந்தொண்டாற்றியுள்ளார்.

அவர் 74 ஆம் ஆண்டு நடந்த தமிழ் ஆராய்ச்சி மாநாட்டின்மூலம் திருப்புமுனை ஒன்றை ஏற்படுத்தினர். அதன்பின் நடந்த அரசியல் நிகழ்வுகளை மக்கள் மறக்கமாட்டார்கள்.

10 ஆண்டு காலத்தில் கஷ்டமான நேரத்தில் அவர் பல்கலைக்கழகத்துக்கு ஆற்றிய சேவை அளப்பரியது.

இப்படிஅவர் கூறினர்.

தமிழ்த்துறைப் பகுதித் தலைவர் பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை பேசுகையில் கூறியதாவது;

வித்தி அழியாத புகழுடன் இருப்பதன் இரகசியம் என்ன? அவர் ஏன் மதிக்கப்பட்டார்?

பேராசிரியர் வித்தியானந்தன் சமூகத்தலைவராக இருந்தார்; தமிழ் பேசும் மக்களின் தலைவராக இருந்தார். அவர் தமிழ் மக்களை நேசித்தார். அவர் அரசியல் வாதியாக இல்லாவிட்டாலும் மக்கள் தலைவனுக இருந்தார்.

உபவேந்தராக இருக்கும் போது விரிவுரைகள் ஆற்றத் தேவையில்லை. அப்படியிருந்த போதும் பேராசிரியர் வித்தி தமிழ்த்துறையில் தனக்கு விரிவுரை நடத்த இடம் தர வேண்டும் என்று கேட்டு விரிவுரைகள் நடத்தினர். அவர் கற்பிக்கும் மரபு இன்று ஒருவரிடமும் இல்லை. அதற்கு நாம் முயல வேண்டும்.

இப்படி அவர் கூறினர்.

பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா பேசுகையில் கூறியதாவது;

பேராசிரியர் வித்தியானந்தன் உபவேந்தராக இருந்து பல்கலைக்கழக அபிவிருத்தியில் முக்கிய பங்கு வகித்தார். பல்கலைக்கழகத்தில் புதிய பீடங்களை ஆரம்பிப்பதிலும் கட்டடங்களை அமைப்பதிலும் முக்கிய கவனம் செலுத்தினர்.

தமிழ் வரலாற்றில் சிறந்த பேராசிரியர்கள் சிறுவயதில் இறப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. பேராசிரியர் சதாசிவம், பேராசிரியர் வித்தியானந்தன் ஆகியோரும் சிறுவயதிலேயே சென்றுவிட்டார்கள்.

இப்படிக் கூறினர்

விரிவுரையாளர் எஸ். சத்தியசீலன் நன்றியுரை கூறினர். (க-3)

## குமபாபிஷேகம்

மீசாலை வெள்ளை மாவடிப் பிள்ளையார்கோவிலில் முருகன் பரிவார மூர்த்தி பிரதிஷ்டா கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது.

பிரம்ம சோதிட பூஷணம் சிவாசாரிய திலகம் சிவ ஸ்ரீ சிதம்பரநாதக் குருக்கள் முன்னின்று கும்பாபிஷேகக் கிரியைகளை நடத்தினர். (ச-31

# மலைமகள் உமையோடு மனமகிழ் கேதீசா!

ராகம்: ஹம்சானந்தி தாளம்: ஆதி

**பல்லவி**

கடைக்கண் பாராயோ கௌரி மணவாளா?
கடைக்கண் பாராயேல் கதியெனக் கேதைடா?
(கடை...)

**அனுபல்லவி**

அலைகடற் கரையோரம் எழில் மிகு பதிதன்னில்
மலைமகள் உமையோடு மனம்மகிழ் கேதீசா!
(கடை...)

**சரணம்**

முனைத்தெழும் மனத்தாசை அலைத்திட அலைவேனை
வினைதரும் துயராலே மிகத்துயர்ப் படுவேனை
இனைத்துணைப் பொழுதுன்னை நினைத்திட மறப்பேனை
அனைத்துமுன் னருளென்று மதித்திட மறுப்பேனை
(கடை...)

—முருகு

[இன்று 12. 05. 89 திருக்கேதீச்சரம் 2 ஆம் திருவிழா]

# பி. எஸ். என்று அழைக்கப்பட்ட...

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தென்றல் அப் பெருமை ஆசிரியர் பி. எஸ். குமாரசுவாமி அவர்களின் தனிச் சொத்தாகும்.

''He Was Par Excellence as A Teacher of Ceylon History R யோகநாதன்.

யாழ். இந்துக்கல்லூரியின் அதிபர், ஆசிரியர், கணித, விஞ்ஞான, கலை மாணவர்கள் அனைவரும் ஆசிரியர்கள் பி. எஸ். ஸை யாழ். இந்துக் கல்லூரியின் இன்னொரு தோற்றமாகக் கண்டனர். யாழ். இந்துக் கல்லூரிக்கு இன்னொரு பெயர் பி. எஸ். என்ற மாணவன் ஆசிரியர் நீண்ட ஒன்பது வருட அதிபர் 24 - 04 - 1988 மறைவு நாள் வரை பழைய மாணவ சங்கத் தலைவர்' மறைந்தும் பழைய மாணவர்களின் உள்ளங்களில் தலைவர். அவர் ஒருவரேதான். பி. எஸ். இன் ஆளுமைத்திறன் அவரிடம் இயல்பாகவே அமைந்த ஒன்று.

ஆசிரியராகவும் சரி, அதிபராகவும் சரி தனது ஏகாதிபத்தியத்தின் அங்கமான மாணவன் ஒவ்வொருவரையும் பெயர் சொல்லி அழைத்தவர் எல்லோரையும் தெரிந்து வைத்திருந்தவர். ஒவ்வொரு மாணவனுக்கும் பி எஸ். இன் இந்த இயல்பு ந கு தெரியும்.

எல்லோராலும் அன்பாக ''பி. எஸ்'' என்று அழைக்கப்பட்டு வந்த ஆசான் தான் பயின்ற யாழ் இந்துக்கல்லூரியிலே ஆசிரியராக ஆரம்பித்து சில காலம் கல்வி அத்தியட்சராகவும் அதிகாரியாகவும், கடமையாற்றி இறுதியில் யாழ் இந்துக் கல்லூரியின் அதிபராக இளைப்பாறினர். ''நாம் யாருக்கும் குடியல்லோம்'' என்ற கொள்கையையும் என் கடன் பணி செய்து கிடப்பதே'' என்ற கடமை உணர்ச்சியையும் கொண்டவராகதன் வாழ்நாள் முழுவதும் வாழ்ந்து காட்டியவர் அமரர் பி. எஸ். என்றல் அது மிகை ஆகாது.

அமரர் பி. எஸ். இடம் கற்கும் வாய்ப்பு எனக்குக் கிடைக்காவிட்டாலும், எல்லாம் வல்ல இறைவன் அவருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பை கொழும்பு பழைய மாணவர் சங்கத்தினூடாகக் கொடுத்தருளினர். நெடுங் காலமாக இயங்காதிருந்த கொழும்பு பழைய மாணவர் சங்கத்தை அமரர் பி. எஸ். அவர்கள் ஒன்று கூட்டி இயங்கவைத்தமையும் யாழ் இந்துக் கல்லூரியைத் தேசிய பாடசாலை என்ற நிலைக்கு உயர்த்தியமையும் எமது மறைந்த அதிபரின் உன்னத உழைப்புக்கு என்றும் சான்று பகரும்.

இவர் அதிபராக இருந்த காலத்தில் யாழ் இந்துக் கல்லூரி பல சாதனைகளை ஆற்றியுள்ளது. குறிப்பாக கல்விப் பொதுத்தராதர உயர்தர பரீட்சைகளில் அதிக அளவு மிகச் சிறப்பு சித்தி ளுடன் சித்தி எய்திய மாணவர்களின் எண்ணிக்கை மிகக் கூடுதலாக இருந்கது விளையாட்டுத்துறையில் தேசியரீதியில் பல சாதனையாற்றி வெற்றி கண்டது.

கல்லூரி தனது நூற்றாண்டு நிறைவைகொண்டாடுவதற்கு ஆயத்தங்கள் செய்யும் இவ்வேளையில் ஒரு அரும் பெரும் தொண்டனை இழந்து தவிக்கின்றது என்று நினைக்கும் போது எம் பெருமானுக்கு அமரரின் சேவை தேவை போலும் என்று எண்ணி நாம் ஆறுதல் அடைவோமாக.

அவரின் இழப்பால் தவிக்கும் குடும்பத்தினருக்கும், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது சங்கத்தின் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களைத்தெரிவிக்கும் இவ்வேளையில் அவரின் ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்போமாக. ★

## மக்கள் அதிபர்.. ..

[3 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தனைக்கும் அவர் செல்வந்தர் அல்லர். ''வரேக்க யாரடா கொண்டு வந்தவன் போகேக்கே யாரடா கொண்டு போவான்'' எல் பார்

அன்னரிடம்படித்தேன். பின்னர் அவரது முயற்சியினலும் சிபார்சினலும் உடனைசிரியனயிருந்து படிப்பித்தேன். மறக்க முடியாத பல நிகழ்வுகள் அவர் நடமாடும் பல்கலைக் கழகம். பலரை அறிந்து வைத்திருந்து தக்கசமயத்தில் பயன் படுத்தும் ஆற்றல் உள்ளவர். ஒன்றை மட்டும் இங்கு குறிப்பிட விரும்புகின்றேன். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியாபாரிகளுக்கு விசேட கழிவு உண்டு.
பற்களுக்கு உறுதியும், வெண்மையும் கொடுப்பது

**அண்ணா பற்பொடி**

அண்ணா பற்பொடி தற்பொழுது மக்களின் வசதிக்கேற்ப 100gr. பைக்கட்டுக்களிலும் வெளிவருகின்றது.

100gr. வெற்றுப் பைக்கட்டுக்களைச் சேர்த்துக் கொடுத்து இனும் பொருள்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

# உதயன்

12 - 05 - 1989 வெள்ளிக்கிழமை

**மல்லி கலந்த கோப்பி**

யாழ்ப்பாண முறைப்படி தயாரிக்கப்பட்ட மல்லி கலந்த கோப்பி இப்போது 100gr. பக்கட்டுக்களில் வெளிவருகிறது.

1 பைக்கட் விலை ரூபா 11-50

வியாபாரிகளுக்கு விசேட கழிவு கொடுக்கப்படும்.

**அண்ணா கோப்பிக்கடை**
யாழ்ப்பாணம்.

### 90 ஆம் ஆண்டில் போயா தினங்கள்

1990 ஆம் ஆண்டுக்கான போயா விடுமுறை தினங்களை உள்நாட்டலுவல்கள், பொது நிர்வாக அமைச்சு உத்தியோகபூர்வமாக அறிவித்திருக்கிறது.

விவரம் வருமாறு:
ஜனவரி — 10.
பெப்ரவரி — 9.
மார்ச் — 10.
ஏப்ரல் — 9.
மே — 9.
ஜூன் — 7.
ஜூலை — 7.
ஆகஸ்ட் — 6.
செப்டம்பர் — 4.
அக்டோபர் — 3.
நவம்பர் — 2.
டிசம்பர் — 1, 31. (ஒ-எ)

### அதிகாரியிடம் முறைப்பாடு

வல்வெட்டித்துறை பிரசைகள் குழுவின் உறுப்பினர் ஒருவரை, குழுவிலிருந்து விலகுமாறு இராணுவத்தினர், வற்புறுத்தியதாக பிரசைகள் குழுவினர் அப்பகுதி அமைதிப்படை இராணுவப்பொறுப்பதிகாரி பிரிகேடியர் சங்கர் பிரசாத்திடம் முறையிட்டனர்.

சம்பந்தப்பட்ட உறுப்பினர் தாக்கப்பட்டார் எனவும் சொல்லப்பட்டது
(அ-160)

### கட்டுவனில் கோமாரி தடுப்பூசி

கட்டுவன் மேற்கு பிள்ளையார் கோவிலடியில் நாளை சனிக்கிழமை காலை 7 மணி தொடக்கம் 8 மணி வரை கோமாரி தடுப்பூசி ஏற்றப்படும்.

இதற்கான ஒழுங்குகளை தெல்லிப்பழை அரசாங்க கால்நடை வைத்தியர் செய்துள்ளார். (ச)

ஆட்கொணர்வு மனு:

## இரு அமைதிப்படை அதிகாரிகளை நீதிமன்றில் ஆஜராக்க உத்தரவு

கொழும்பு, மே 12

ஆட்கொணர்வு மனு ஒன்றின் மீது மேன்முறையீட்டுநீதிமன்றம் அமைதிப் படையின் வவுனியா தளபதி பிரிகேடியர் மஞ்சித்சிங், நெடுங்கேணி அமைதிப்படை முகாம் அதிகாரி மேஜர் செஸோதியா ஆகியோரை இம்மாதம்31ஆம் திகதி ஆஜராகும்படி உத்தரவிட்டது.

மாமடு, நெடுங்கேணி வாசியான கந்தையா தம்பிஐயா இந்த ஆட்கொணர்வு மனுவைத் தாக்கல் செய்திருந்தார்.

பிரதிவாதிகளாக இரண்டு அமைதிப்படை அதிகாரிகளும் சட்டமா அதிபரும் மனுவில் காட்டப்பட்டுள்ளனர்.

மனுதார் தனது மனுவில் கூறியிருப்பதாவது:

எனது மகன் மதீஸ்வரன் நெடுங்கேணி மகாவித்தியாலயத்தில் ஜி. சி, ஈ. உயர்தர வகுப்பில் படித்துக்கொண்டிருந்தார்.

31-10-88 காலை 7-30 மணியளவில் மதீஸ்வரனை அமைதிப்படை கைது செய்தது. முகாமுக்குச் சென்று மகா வித்தியாலய ஆசிரியர்களும் பெற்றோரும் சென்று விசாரித்தனர்.

மதீஸ்வரன் விசாரிக்கப்படுவதாகவும் விசாரணை முடிவில் விடுவிக்கப்படுவார் என்றும் நெடுங்கேணி முகாம் அதிகாரி மேஜர் செஸோதியா சொன்னார்.

பின்னர் நான் முகாம் சென்று விசாரித்தேன். நவம்பர் 3இல் கிராமோதய சபைத் தலைவர் சென்றுவிசாரித்தார். அப்போது மதீஸ்வரன் சுகவீனமாக இருப்பதாகவும் நெடுங்கேணி ஆஸ்பத்திரிக்குக் கொண்டுசெல்லப்படுவார் என்றும் அங்குபோய் நிற்கும்படியும் கூறினார்கள்.

ஆனால் பின்னர் கிராமோதயசபைத் தலைவர் முகாமுக்கு அழைக்கப்பட்டார். ஏனைய போராளிகளை அடையாளம் காட்ட மதீஸ்வரனை அமைதிப்படை கூட்டிச் சென்றிருப்பதாகவும் முகாமில் தெரிவிக்கப்பட்டது.

நவம்பர் 9ஆம் திகதி முகாமுக்கு மீண்டும் சென்றபோது மதீஸ்வரன் தப்பிச் சென்றுவிட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. இந்த ஆண்டு பெப்ரவரி மாதம் முதலாம் திகதி எனது மனைவி வவுனியா அமைதிப்படைத் தளபதியைச் சந்தித்தபோது, மதீஸ்வரன் விடுவிக்கப்பட்டுவிட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

மதீஸ்வரனைத் தொடர்ந்து சட்டவிரோதமாகத் தடுத்து வைத்துள்ளார்கள் அல்லது அவருக்கு ஏதாவது துன்பம் செய்துவிட்டார்களென அச்சப்படுகின்றேன் — என்றுமனுவில் கூறப்பட்டிருக்கிறது.
(ஒ-எ]

### அரச பஸ் உட்பட------

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கட்டியிருந்தாலும். ஏனைய மூவரும் பனியன் போன்ற ஒருவித துணியால் தலையை மூடி கண்கள், வாய்ப்பகுதிகளுக்குத் துளையிட்டிருந்தார்களாம்.

பஸ் நிறுத்தப்பட்டதும் பயணிகளைக் கீழே இறக்கி, வீதியின் ஓரத்தில் வரிசையாக இருத்தி வைத்து அவர்களிடமிருந்த ரொக்கப் பணம், தங்க ஆபரணங்கள், பெண்கள் அணிந்திருந்த நகைகள் என்பவத்றையும் கொள்ளையடித்துள்ளனர்.

**ஏனைய வாகனங்களில்**

இந்த [illegible] இ.போ.ச. பஸ்ஸின் பின்னால் வந்த லொறி ஒன்றும், வேறு இரண்டு தனியார் பஸ்கள், இ. போ. ச. பஸ் ஒன்று ஆகியவையும் மறிக்கப்பட்டு கொள்ளையிடப்பட்டன.

சம்பவத்தின் போது முதலாவது பஸ் கண்டக்டரான சுந்தரமூர்த்தி பஸ்ஸின் பின்னால் அழைத்துச் செல்லப்பட்டாராம். அங்கு வைத்து அவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டுள்ளது.

தலையில் காயமடைந்த இவர் இறந்துவிட்டார் எனக் கருதியே கொள்ளையர்கள் அவரை விட்டுச் சென்றிருக்கலாம் என்று சம்பவத்தை நேரில் கண்ட பயணி ஒருவர் தெரிவித்தார்.

சுமார் ஒருமணி நேரம் இக்கொள்ளை நாடகம் நடைபெற்றுள்ளது. பின்னர் வந்த இ. போ. ச. பஸ் ஒன்றில் காயமடைந்த கண்டக்டர் வவுனியாவுக்குக் கொண்டுவரப்பட்டு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

கொள்ளையர்கள் ரிவோல்வர் போன்ற சிறியரக துப்பாக்கிகளை வைத்திருந்தனராம்.
(ஒ 164-94)

### யாழ். இரத்த-----

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி

இரத்தம் மட்டும் செலுத்தினால் போதுமானது என்றும் தெரிவிக்கப்பட்டது.

தற்சமயம் இரத்தம் கூறு பிரிக்கப்படாமல் முழுமையாக ஏற்றப்பட்டு வருகிறது.

ஆய்வுகூட நிபுணர் வந்தபின் இக்கருவிமூலம் கூடுதல் இரத்தத்தைச் சேமிக்க முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது. [ஒ 3]

### மீனவர் கடலில் மூழ்கி மரணம்

மண்டைதீவுக் கடலில் தொழிலில் ஈடுபட்டிருந்த குருநகர் மீனவர் ஒருவர் கடலில் மூழ்கி மரணமானார்.

இச்சம்பவம் புதன்கிழமை இரவு இடம்பெற்றது.

மரணமானவர் குருநகர் றெக்கிளமேஷன் இறப்பியேல் செல்வரட்ணம் (வயது 62) என்பவராவார். (ஒ-51)

### விஜேவீரா-- --

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் நடத்த மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) முன்வந்துள்ளது.

இதற்கான நிபந்தனை ஒன்றை மக்கள் விடுதலை முன்னணி அரசுக்குவிதித்துள்ளது.

அந்த நிபந்தனை —

சுகயீனம் அடைந்துள்ள மக்கள் விடுதலை முன்னணித் தலைவர் ரோஹண விஜேவீரா வெளிநாடு சென்று அவசர வைத்திய சிகிச்சை பெற அனுமதிக்க வேண்டும்

இந்த நிபந்தனையை ஜனாதிபதி பிரேமதாச ஏற்றிருக்கிறார்.

எந்த வைத்திய சிகிச்சை என்றாலும் ரோஹண விஜேவீராவுக்குக் கிடைக்க உதவுவதற்குத் தயாராக இருப்பதாக ஜனாதிபதி பிரேமதாச அறிவித்திருக்கிறார்.

நேற்றுக் காலை கொழும்பில் உள்ள பி. பி. ஸி. செய்தி நிறுவனத்துடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்ட ஜே. வி. பி ஆதரவாளர் ஒருவரே நிபந்தனையையும், விருப்பத்தையும் தெரிவித்தார் -

திரு ரோஹண விஜேவீர லண்டனுக்கு அனுப்பப்பட்டு சிகிச்சை பெற உதவும் பட்சத்தில் தாம் (ஜே. வி. பி) பேச்சுக்கு வர சம்மதம் என அவர் தொலைபேசியில் தெரிவித்தார்-

இந்த வேண்டுகோளை அடுத்து இலங்கை அரசு திரு. விஜேவீர எந்த நிபந்தனையும் இன்றி லண்டன் சென்று சிகிச்சை பெற அனுமதி வழங்கியுள்ளது-

ஜே. வி. பி. தலைவரின் உயிரைப் பேச்சு வார்த்தைக்கு நிபந்தனையாகவோ, ''பணயமாகவோ'' வைக்கத் தயாரில்லை என இலங்கை அரசு அறிவித்துள்ளது- என்பதாகும். (அ-1-எ-9)

### அமைச்சர்------

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வில் அமைச்சர் ஏ. சி. எஸ். ஹமீத். விடுதலைப் புலிகள் பிரதிநிதிகள் தங்கியிருக்கும் ஹோட்டலுக்குச் சென்று தனியாகச் சந்தித்துப் பேசினார்.

ஜனாப் ஹமீத்தே விடுதலைப் புலிகளுடனான பேச்சில் அரசதரப்பின் பிரதம பேச்சாளராகஇருப்பார் என்று அறியப்படுகிறது.

ஏனைய அமைச்சர்கள் தேவை ஏற்படும் போதே பேச்சில் கலந்து கொள்வர்.

பேச்சுவார்த்தைகள் இன்றும் தொடர்ந்து நடைபெறும். (அ-1)

### அரசு - விடுதலைப்----

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

எனினும் பேச்சு மூலம் எவ்வகைத் தீர்வு கிடைக்கும் என்பதை அவராலும் கூற முடியவில்லை — என்று திரு. அமிர்தலிங்கம் சொன்னார்.
(அ-1)

### மதிய உணவு சாப்------

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

முற்றனர்.

இவர்களுக்கு வழங்கப்பட்ட உணவு வகைகளில் விஷம் ஊறியிருக்கலாம் என ஆஸ்பத்திரி வட்டாரங்கள் சந்தேகித்தன.

ஒரு பாடசாலையைச் சேர்ந்த 75 மாணவர்களும், மற்றப் பாடசாலையைச் சேர்ந்த 22 மாணவர்களும் ஆஸ்பத்திரியில் ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருவதாகக் கொழும்புக்குத் தகவல் கிடைத்தது. (அ-1)

**WANTED**

**VAN SALES REPRESENTATIVE**

தினமும் பாவனையிலுள்ள தரமான பொருட்கள் வாகனத்தில் கொண்டு சென்று விற்பனை செய்ய அனுபவம் வாயந்த விற்பனையாளர் தேவை. உள்ளூர் உற்பத்திகளும், கொழும்பில் பிரபலமான கம்பனிகளின் உற்பத்திகளும் விற்பனை செய்யக்கூடியவராகவும் யாழ்குடா நாட்டினுள் வியாபாரம் செய்த அனுபவம் உள்ளவராகவும் இருத்தல் விரும்பத்தக்கது. முயற்சி உடையோர் மாதம் ரூபா 4000/-க்கு குறையாது ஊதியம் பெற வாய்ப்புண்டு.

20-05-89க்கு முன்னதாக 2 நற்சான்றிதழ்களுடனும் 2 நடுவர்களின் பெயருடனும் விண்ணப்பிக்கவும்.

517,
C/o உதயன்

(C/2561)

**உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வேலைவாய்ப்பினைப் பெறுவதற்கான**

**கம்பியூட்டர் கல்வி**

**Diploma in Data Processing and Computer Programming in Basic Language**

ஆரம்பம்: 15 - 05 - 1989 (திங்கள், புதன், வெள்ளி)

சேரும்போது செலுத்தவேண்டியது ரூபா 500/-

O/L படித்த இருபாலாரும் சேரலாம். குளிரூட்டப்பட்ட அறையில் கூடிய நேர செய்முறைப் பயிற்சி I.B.M. (COMPATIBLE) கம்பியூட்டரில் வழங்கப்படும். பயிற்சி முடிவில் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.

குறிப்பிட்ட தொகை மாணவ மாணவியரே சேர்க்கப்படுவார்களாகையால் விண்ணப்பப்படிவத்தைப் பெற்றுப் பதிவுசெய்யவும்.

விண்ணப்ப முடிவுத் திகதி: 14 - 05 - 1989




UNIKCO COMPUTER CENTRE
No. 5, Power House Road,
2nd Lane, Jaffna.
(Near Sub - Post Office)

(சி/2437)

## மரண அறிவித்தல்

### திருமதி இரத்தினம் சின்னத்தம்பி

உடையார் வளவு புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த திருமதி இரத்தினம் சின்னத்தம்பி 08-05-1989 திங்கட்கிழமை காலமானார்.

இவர் செல்லத்துரை சின்னத்தம்பியின் (இளைப்பாறிய லிகிதர், முள்ளாக்கந்தை தோட்டம், இரத்தினபுரி) அன்பு மனைவியும், நகுலேஸ்வரன் (France), பரமேஸ்வரன் (Madras), காலஞ்சென்ற பிறிந்தி ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 09-05-1989 செவ்வாய்க்கிழமை தென் இந்தியாவில் நடைபெற்றது. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
இளையதம்பி (வாப்பா)

'உடையார் வளவு',
புன்னாலைக்கட்டுவன்.

[475]

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சின்னத்துரை பரமேஸ்வரி

(யாழ் இந்து மகளிர் கல்லூரி, உரும்பராய் இந்துக் கல்லூரி, சைவத் தமிழ் வித்தியாலயம், சந்திரோதய வித்தியாலயம், கொக்குவில் ஸ்ரீராம கிருஷ்ண சாரதா மகளிர் கல்லூரி ஆகியவையின் முன்னாள் ஆசிரியை)

உரும்பராயை பிறப்பிடமாகவும், குமரகிரிநந்தாவில் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை பரமேஸ்வரி காலமானார். அன்னார் சின்னத்துரை அவர்களின் (முல்லைத்தீவு கரைச்சிக்குடியிருப்பு இந்து வித்தியாலய முன்னாள் அதிபர்), அன்பு மனைவியும், பத்மநாதன் செல்வகுமாரி (U.K), செல்வகுமார் (பொறியியலாளர் அவுஸ்ரேலியா), ஜெயகுமார் (கணக்காளர் பப்புவாநியூகினி) ஆகியோரின் அன்புத் தாயாரும் பத்மநாதன் (பொறியியலாளர் U.K), பிரியந்தி B.Sc (சுட்டி), மதிவதனி ஆகியோரின் அன்பு மாமியாரும், சிவதாசனின் பெரியதாயாரும் அகிலன் நிமலன், கைலன், கார்த்திக், கவிதா ஆகியோரின் அன்புப் பேத்தியாருமாவார். ஈமக்கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் 13. 05. 89 சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டிக் கொள்ளுகின்றோம்.

தகவல் :
செ. சின்னத்துரை
(இளைப்பாறிய அதிபர்)

'குமரகிரி'
நந்தாவில், கொக்குவில்.

[473]

### கமலநாதன் தவநாதன்

(Bartleet Elictronles Ltd, Colombo - 7
B. Sc. Jaffna Unlversity Service Engineer.)

இமையாணன் மேற்கு, உடுப்பிட்டியைச் சேர்ந்த செல்வன் கமலநாதன் தவநாதன் 10. 05. 89 இல் அகால மரணமானார். இவர் காலஞ்சென்ற திரு. தம்பிமுத்து கமலநாதன், திருமதி இராசம்மா கமலநாதன் ஆகியோரின் அன்பு மகனும், விமலாதேவி, விரசாதேவி, விஜயதேவி, ரோகினி, நல்லநாதன், காலஞ்சென்ற தில்லைநாதன், திலகவதி, சுகந்தினி ஆகியோரின் அன்புச் சகோதரனும், கந்தையா, மகாதேவன், சற்குணராசா சந்திரகுமார், சசிகலா, குகதேவன், புவனேஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். உறவினர், நண்பர்கள், அனைவரும் இத்தகவலை ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

தகவல்:
திருமதி இராசம்மா கமலநாதன்
(தாயார்)

இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி.

(472)

### திருமதி எஸ். ரி. செபஸ்தியன்

மன்னாரைப் பிறப்பிடமாகக்கொண்டவரும், யாழ்ப்பாணம் வேம்படி வீதியில் 19 ஆம் இலக்கத்தில் வசித்தவருமாகிய திருமதி எவ். ரி. செபஸ்தியன் 11-05-1989 காலை காலமானார். இவர் காலஞ்சென்ற கே. ஜீ. செபஸ்தியன் (Post master Trinco) அவர்களின் அன்பு மனைவியும், ரோகினி, காமினி, மேசி, ஜசிந்தா, ஆனந்தி (U. K), சாவித்திரி, சிசில் (Canada), அன்ரன், மல்லிகா, செல்வநாதன், டட்லி, காலஞ்சென்ற கிறிஸ்டி, ராஜநாதன், றெக்ஸ் ஆகியோரின் அன்புத் தாயாரும், ஞானசேகரம் (Royal Dispensary), கதிர்காமநாதன் (மக்கள் வங்கி, பிராந்தியத் தலைமையகம்), றெக்ஸ், ரஞ்சன், திருச்சந்திரன், சொலமன், ரதி, சாந்தி, லிஸ் ஆகியோருடைய மாமியாருமாவார்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

மரணச் சடங்குகள் சனிக்கிழமை காலை 10 மணிக்கு 19, வேம்படி வீதி இல்லத்தில் நடைபெறும்.

தகவல்:
மல்லிகா கதிர்காமநாதன்

19, வேம்படி ரோட்,
யாழ்ப்பாணம்.

(474)

### திரு. சிற்றம்பலம் விஸ்வநாதன்

தெல்லிப்பளை, துர்க்காபுரம் எழவாவுடையைச் சேர்ந்த திரு. சிற்றம்பலம் விஸ்வநாதன் காலமானார்.

இவர் காலஞ்சென்ற திரு. திருமதி சிற்றம்பலம் பார்வதம் தம்பதிகளின் அன்பு மகனும், அமிர்தாம்பிகையின் அன்புக் கணவரும், திருமதி பரமேஸ்வரி நடராசாவின் அன்புச் சகோதரனும் ஆவார்.

ஈமச்சடங்குகள் 10-05-1989 அன்று புதன்கிழமை பிற்பகல் 4-00 மணிக்கு இவரின் இல்லத்தில் நடைபெற்றது. தயவுசெய்து இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றேன்.

தகவல்:
திருமதி அமிர்தாம்பிகை விஸ்வநாதன்

துர்க்காபுரம்,
தெல்லிப்பளை.

[477]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இல் உள்ள அச்சகத்தில் 12—05—1989 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது